Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTER NET மூலம்
குறைந்த கட்டணத்தில் தொடர்புகொள்ள
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
இலங்கை முழுவதும் 24 மணிநேரத்தில்
துரித தபால்/பொதிகள் சேவை.
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
303, K.K.S. Road, Jaffna. T.P. 021-2222670, 2223588
Fax - 2223214, Email-del - smskr@eureka.lk
(சி-709)

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 பங்குனி 12 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 முஹறம் 22 (26.03.2003) புதன்கிழமை இதழ் :174

# புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து வந்த மக்களை

# தேர்தலில் வாக்களிக்கவிடாது தடுத்தது

# சட்டவிரோதமென உயர்நீதிமன்று தீர்ப்பு!

**விண்ணாணம் விநாசியர்**



நிதானம் தப்பினால் நியாயமும் தப்புந்தானே...!

## இராணுவத் தளபதிக்கு அபராதமும் விதிப்பு

(கொழும்பு)

**கடந்த பொதுத்தேர்தலின்போது, வடக்கு - கிழக்குப் பகுதியில் ராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் இருந்து வந்த மக்களை வாக்களிப்பதற்கு அனுமதி வழங்காதது சட்டவிரோதமானது என நேற்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது.**

இந்தப் பிரதேசங்களைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட மூன்று பொதுமக்கள் தாக்கல் செய்த வழக்கு விசாரணை நேற்று உயர்நீதிமன்றில் இடம்பெற்றது.

நீதியரசர்களான மார்க் பெர்ணான்டோ, சி.வி.விக்னேஸ்வரன், அன்வர் இஸ்மாயில் ஆகியோர் இந்தத் தீர்ப்பை வழங்கினர். வழக்குத் தாக்கல் செய்த மூவருக்கும் நஷ்டஈடாக தலா ஒரு லட்சம் ரூபா வீதம் மூன்று லட்சம் ரூபாவை அரசாங்கம் வழங்கவேண்டும் என்றும் நீதியரசர்கள் உத்தரவிட்டனர்.

அத்துடன், மக்களை வாக்களிக்கவிடாது ராணுவம் தடுத்தமைக்காக ராணுவத் தளபதி பலகல்ல, தனது சொந்தப் பணத்தில் 90 ஆயிரம் ரூபாவை, பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கவேண்டும். தேர்தல் ஆணையாளர், தலா ஆயிரம் ரூபாவை குற்றப் பணமாகச் செலுத்த வேண்டும் எனவும் தீர்ப்பளிக்கப்பட்டது.

அந்தப் பகுதியில் உள்ள மக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஞாயிற்றுக்கிழமையில் ஏ-9 திறப்பு; கண்காணிப்புக் குழுவும் அறிவிப்பு!

ஏப்ரல் முதலாம் திகதி முதல் உயிலங்குளம், முகமாலை, ஓமந்தை சோதனைச்சாவடிகள் ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறக்கப்படும் என்று போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுப் பேச்சாளர் ரெய்ரூர் ரொக்கில்சன் தெரிவித்தார்.

ஞயிற்றுக்கிழமைகளிலும் ஏ-9 வீதியைத் திறந்திருக்க நடவடிக்கை எடுக்குமாறு புலிகள், சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்திடம் கோரிக்கை விடுத்திருந்தனர். இதனடிப்படையிலேயே இம்முடிவு எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இதேவேளை, ஏப்ரல் முதலாம் திகதி முதல் ஏ-9 வீதியை ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறக்க நடவடிக்கை எடுக்கும்படி பாதுகாப்பு அமைச்சு, உள்ளூர் படையதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

## தொண்டராசிரியர் போராட்டம் 28 ஆம் திகதி முதல் விஸ்தரிப்பு

(யாழ்ப்பாணம்)

தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனங்கள், எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்பாக வழங்கப்படாவிட்டால், வடக்கு - கிழக்கிலுள்ள அனைத்துப் பாடசாலைகளையும் செயலிழக்கச் செய்வோம்.

- இவ்வாறு தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் மகாசிவம் தெரிவித்துள்ளார்.

தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கக்கோரி, கடந்த 23 தினங்களாக மாகாணக் கல்வி அமைச்சின் முன்பாக தொண்டர் ஆசிரியர்கள் மறியற் போராட்டத்

(10 ஆம் பக்கம் பார்க்க)



தொண்டராசிரியர்களுக்கு ஆதரவாக திருமலையில் தமிழர் ஆசிரியர் சங்கம் நடத்தும் போராட்டம்

# நிதானமின்றி பேசுவது தமிழருக்கே பாதிப்பு!

## சங்கரியின் கருத்துப்பற்றி இரா.சம்பந்தன்

முக்கிய அரசியல் தீர்வு நோக்கிய முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது, ஒவ்வொருவரும் மிகவும் நிதானமாகப் பேச வேண்டியது அவசியமானதாகும் எனத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளை ஏக பிரதிநிதிகள் எனக் கூறவில்லை எனவும், நாங்கள் அவர்களின் அங்கம் அல்ல. அதேவேளை எங்களது நிலைப்பாடும் அவர்களது நிலைப்பாடும் ஒன்றாக இருந்தாலும் வழிமுறைகள் வேறாகவுள்ளன எனவும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரி, யாழ்ப்பாணத்தில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசியது பற்றி - நமது ஈழநாட்டுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இரா.சம்பந்தன் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக இரா.சம்பந்தன் மேலும் கூறுகையில், தமிழரின் நீண்டகாலப் பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காணுவதற்காக, மிகவும் அர்த்தமுள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற முக்கிய

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க செய்மதி சமிக்ஞையை ஈராக் தடைசெய்ய ரஷ்யா உதவி!

ஈராக்கில் வீசும் கடும் மணற்புயல், அமெரிக்க - பிரிட்டிஷ் படைகளின் நகர்வைப் பாதித்துள்ளது. கடும் மணற்புயல், தொழில்நுட்பத் திறன்வாய்ந்த தமது போராயுதங்களுக்குச் சேதம் விளைவிக்கலாமென, அமெரிக்கப் படையதிகாரிகள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, ஈராக்கியப் படைகள், எண்ணெய்க் கிணறுகள் சிலவற்றுக்குத் தீ மூட்டியதால் எழும் கரும்புகை மண்டலம் - அமெரிக்க உளவுச் செய்மதிகள், ஈராக்கிய நிலைகளைக் கண்டறிவதைத் தடுப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன், லேசர் கதிரால் வழிநடத்தப்படும் குரூஸ் ஏவுகணைகள்கூட,

(10 ஆம் பக்கம் பார்க்க)



மணற்புயல் ஊடாகச் செல்லும் அமெரிக்க கனரக இராணுவ வாகனம். உள்ளே - மணற்புயலால் பாதிக்கப்பட்ட அமெரிக்கச் சிப்பாய் ஒருவர்.

# சமாதான முயற்சிக்கான ஆதரவினை அமெரிக்கா மீண்டும் உறுதிப்படுத்தியது

## அமைச்சர் பீரிஸிடம் ஆர்மிரேஜ் தெரிவிப்பு



இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு அமெரிக்கா வழங்கும் ஆதரவை அந்நாட்டுப் பிரதி ராஜாங்க அமைச்சர் றிச்சர்ட் ஆர்மிரேஜ் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளார்.

அமைச்சர் ஜி.எல். பீரிஸ், மற்றும் அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகியோர், வொஷிங்ரனில் றிச்சர்ட் ஆர்மிரேஜைச் சந்தித்துப் பேசியபோதே இந்த உறுதிமொழி .வழங்கப்பட்டது.

இந்தப் பேச்சுக்களின்போது, இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள் குறித்தும், அதன் முன்னேற்றங்கள் குறித்தும் அமைச்சர் பீரிஸ், ஆர்மிரேஜுக்கு விளக்கமளித்திருந்தார்.

பேச்சுக்களை அரசும் புலிகளும் அர்ப்பணிப்புடன் முன்னெடுக்கவேண்டும். இலங்கையின் இனப்பிரச்சினைக்கு ஜனநாயகக் கொள்கையின் அடிப்படையில் தீர்வு கிடைக்கும் என அமெரிக்கா நம்புவதாகவும், அந்தத் தீர்வு இலங்கையின் பிரதேச ஒருமைப்பாட்டிற்கு கௌரவமளிக்குமென நம்புவதாகவும் றிச்சர்ட் ஆர்மிரேஜ்

(10 ஆம் பக்கம் பார்க்க)

SERENDIB AIRLINE
யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்
021 - 2223916, 0777 - 517019
01-505632, 074-612656, 01-390128
(சி-626)

நந்தி
1-4 323
NANDI BRAND RUPIKA TILES



இதோ!
இலங்கையின் முதல்தர கூரை ஓடு
யாழ்ப்பாணத்திலும் அறிமுகமாகிறது. நிறை- 2.5 Kg
✳ Araliya Stores, No - 11, Negombo Road, Dankotuwa
T.P: 031 - 58174
✳ Rupika Tiles Factory, Udangawa, Kochchikade
T.P: 031 - 77346
✳ No.6, Hindu Ladies Lane, Kantharmadam, Jaffna
T.P: 021 - 2223268
சிறந்த தரத்திற்கு உத்தரவாதம்
(290)



# தவறிவிட்டது

கடந்த திங்கட்கிழமை 24.03.2003 நண்பகல் 12 மணிக்கும் பிற்பகல் 3 மணிக்கும் இடையில் ஓமந்தைச் சோதனைச் சாவடிக்கும் முகமாலை சோதனைச் சாவடிக்கும் இடையில் கண்டிவீதியில் 'டொசிபா டெக்' மற்றும் இதர பொருட்களும் தவறவிடப்பட்டுள்ளன. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவரிக்கோ அல்லது தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளும்படி வேண்டுகிறோம்.

திருமதி நவராஜா பாக்கியம்,
34, நாயன்மார் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி ~ 0776043979, 0777075388

தகுந்த சன்மானம் வழங்கப்படும் (291)



இனிய புத்தாண்டை முன்னிட்டு
விசேட தள்ளுபடி
25.03.2003 - 14.04.2003 வரையுமே
உங்கள் ரசனைக்கும் தேவைக்கும் ஏற்ப சகலவிதமான ஆடைகளையும் குறைந்த விலையில் பெற
லைடன் புடவை நிலையம்
410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P NO:- 021-2222381 (சி/710)


# சின்னஞ்சிறு செய்திகள்

## விபத்தில் சாவு

கடந்த 22 ஆம் திகதி தவறுதலான விபத்து ஒன்றில் போராளி ஒருவர் சாவடைந்துள்ளார். சாருமதி என்றழைக்கப்படும், சாவகச்சேரியை சொந்த முகவரியாகவும், வெள்ளாங்குளம், மன்னாரைத் தற்காலிக முகவரியாகவும் கொண்ட செல்வநாயகம் உமாதேவி என்ற போராளியே சாவடைந்தவராவார்.

## மீள்குடியமர்வு நிதி வங்கிகளுக்கு அனுப்பிவைப்பு

(யாழ்ப்பாணம்)

மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கான நிதி, நிக்கொட் அமைப்பினூடாகத் தற்போது வழங்கப்பட்டு வருகின்றது.

தற்போது மருதங்கேணிப் பிரதேசத்தின் 346 குடும்பங்களுக்கும், சண்டிலிப்பாய் பிரதேசத்தின் 496 குடும்பங்களுக்கும், நல்லூர் பிரதேசத்தின் 117 குடும்பங்களுக்குமான நிதி, நிக்கொட் ஊடாக அந்தந்தப் பிரதேச கிராமிய வங்கிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மிகவிரைவில் இக்குடும்பங்கள் நிதியைப் பெற்றுக்கொள்ளலாம். மீளக்குடியமர்ந்த ஏனைய குடும்பங்களுக்கும் கட்டங்கட்டமாக இந்நிதி வழங்கப்படவுள்ளது. (ரா,சு)

## கட்டுரைப் போட்டியில் இரண்டாமிடம்

கிளிநொச்சி இந்துக் கல்லூரி மாணவி ஜிந்துஜா மதுரநாயகம், அகில இலங்கை சர்வதேச மகளிர் தின கட்டுரைப் போட்டியில் 2 ஆம் இடத்தைப் பெற்றுள்ளார். இவர் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் மகளிர் விவகார அமைச்சரிடமிருந்து பரிசுகளையும் சான்றிதழ்களையும் பெற்றார்.

## ஆசிரியர் செயலமர்வு திகதி மாற்றப்படும்

தென்மராட்சி வலயப் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு நாளை நடைபெறவிருந்த ஆசிரியர் தரங்கணிப்புச் செயலமர்வு, 29 ஆம் திகதி நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## பாவனைக்குதவாத பால்மா விநியோகம்

குடத்தனை, மணற்காட்டுப் பகுதிகளில், மக்களுக்கு நிவாரணத்திற்காக வழங்கப்பட்ட பால்மா, காலாவதியானது என பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் கண்டுபிடிக்கப்பட்டது. அப்பகுதியிலிருந்து 35 லக்ஸ்பிறே பால்மா பைக்கற்றுக்கள், கடந்த 24 ஆம் திகதி கைப்பற்றப்பட்டதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகளும் நடைபெறுமெனத் தெரியவருகிறது. (116)

## இளைஞர் படையணிக்கு ஆட்சேர்ப்பு

தேசிய இளைஞர் படையணிக்கு ஆட்களை சேர்த்துக் கொள்வதற்கு முதற்கட்டமாக, வட்டுக்கோட்டை பிரதேச இளைஞர்களுக்கு நேர்முகப பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

நாளை மறுதினம் யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ள நேர்முகப்பரீட்சையைத் தொடர்ந்து, ஏனைய பிரதேசங்களிற்கும் கட்டங்கட்டமாக நேர்முகப்பரீட்சை நடத்தப்படுமென தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஏற்கனவே கிராமசேவகர் பிரிவு ரீதியாக இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தமை தெரிந்ததே. (ரா)


31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 12 - 06 - 1951



உதிர்வு 24 - 02 - 2003

அமரர் செல்லர்- சின்னத்துரை

எங்கள் அன்பின் குலவிளக்கே
பாசத்தின் ஒளிவிளக்கே
நீங்கள் மறைந்து போனாலும்
உங்கள் நினைவு எம்மை விட்டு அகலாது
உங்கள் ஆத்மா சாந்தி அடைய
எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

நாச்சிமார் கோவிலடி,
கரணவாய் வடக்கு. (சி/713) குடும்பத்தினர்.



மலிவு விற்பனை
20% முதல் 50% வரை
புதுக்கணக்குப் போடவிருப்பதால்
பாடசாலை மாணவர்களுக்கான புத்தகங்கள், மருத்துவம், கணினி, பொறியியல், இந்திய பிரபல எழுத்தாளர்களின் நாவல்கள் போன்றன மலிவு விலையில் விற்பனையாகின்றது.
ஒருமுறை விஜயம் செய்யுங்கள்.
(சி-706)
ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.



ASIABIKE DELUXE
இதோ! யாழ்ப்பாணத்திலும்
ஆண்டாண்டு காலமாக முன்னோடியாகத் திகழும்
ஏசியா சைக்கிள்கள்
The ALL-STEEL Bicycle
தற்போது கையிருப்பில் இருப்பது ஆண்களுக்கானது மட்டுமே
வாடிக்கையாளருக்கு ஓர் நற்செய்தி
சிறுவர்களுக்கான பெண்களுக்கான
சைக்கிள்களை மிகவிரைவில் எதிர்பாருங்கள்.
☆ நவீன தொழில்நுட்பம்
☆ ஜப்பானிய உதிரிப்பாகங்கள் கொண்டது
☆ ஆயுட்காலம் முழுவதும் உத்தரவாதம்



KING OF CYCLES
Asia Bike
DELUXE
மேலும் ஒறிஜினல் லுமாலா, ஹீரோ சைக்கிள்களும் இங்கே விற்பனையாகின்றன.
ஈஸ்வரன் ரேடர்ஸ்
இல.69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P. 021-222-2813
148, கண்டி வீதி, வவுனியா.
T.P. 024-22497
132, டாம் வீதி, கொழும்பு-12
T.P. 074-714312
(சி-712)
மீண்டும் யாழ்ப்பாணத்தில் அறிமுகப்படுத்தப்படுகின்ற ஏசியா சைக்கிளை முதன்முதலில் கொள்வனவுசெய்த பெருமைக்குரியவர்
இராமபிள்ளை மருதலிங்கம் NO. 66, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.



நிறஞ்சனாஸ் சங்கானை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00(பு.நே.)
சத்யராஜ், சுவலட்சுமி நடித்த
ஆண்டான் அடிமை
வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 மணி காட்சி
HOLLOW MAN
(சி-627)



ராஜா யாழ்ப்பாணம்.
விஜய், ரீமாசென், வடிவேல் நடித்த



பகவதி
10.30, 2.30, 6.30 மட்டும்.
JACKIE CHAN
RUSH HOUR - 2
இரவு 9.30இற்கு மட்டும் (26 வரை)
(சி-628)



தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்குழு உறுப்பினர்களைத் தலைவர் வே.பிரபாகரன், அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், அரசியற் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன், அடேல் பாலசிங்கம் ஆகியோர் சந்தித்துப் பேசுவதைப் படத்தில் காணலாம்.

# சீன மீன்பிடி ட்ரோலர் மூழ்கடிப்பு; அறிக்கை சீனத் தூதரகத்துக்கு!

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் சீன நாட்டு மீன்பிடிப்படகு மூழ்கடிக்கப்பட்ட சம்பவம் தொடர்பான ஆட்சேபத்தை வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்ணாண்டோவை நேரில் சந்தித்த சீனத் தூதுவர் தெரிவித்துள்ளார்.

தமது நாட்டு மீன்பிடி ட்ரோலர் தாக்கப்பட்டு, அதிலிருந்து 17 சீனர்கள் கொல்லப்பட்டதற்கு அவர் கண்டனம் தெரிவித்ததோடு, இந்தச் சம்பவம் தொடர்பாக முழுமையான விசாரணை ஒன்றை மேற்கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார்.

இதற்குப் பதிலளித்த வெளிவிவகார அமைச்சர் ரிரோன் பெர்ணான்டோ - சம்பந்தப்பட்ட தரப்புக்களிடமிருந்து தாம் முழுமையான அறிக்கையைத் தருமாறு கோரியிருப்பதாகவும், அது கிடைத்ததும் சீனத் தூதரகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் எனத் தெரிவித்தார்.

# கடமையில் உறங்கிய பொலிஸார்; துப்பாக்கிகளைப் பறிகொடுத்தனர்!

கட்டுநாயக்க விமானப் படைத் தளத்திற்குப் பாதுகாப்பாக அமைக்கப்பட்டிருந்த பொலிஸ் சோதனைச் சாவடி ஒன்றிலிருந்த ரி-56 துப்பாக்கிகள் இரண்டும், அவற்றுக்கான ரவைகளும் காணாமற்போயுள்ளன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை, ஹிரலவத்தை என்ற இடத்திலிருந்த சோதனைச் சாவடியில் இரவுக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் இருவர் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த வேளை - அவர்களின் துப் பாக்கிகள் அபகரிக்கபபட்டுள்ளன. இதனையடுத்துச் சேவையில் இருந்தபோது, உறங்கிய இரு பொலிஸாரும் சேவையிலிருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டு, அவர்கள்மீது விசாரணை ஆரம்பிக்கப்பட்டுளளது. (01)

# விலைவாசி உயர்வே முக்கிய பிரச்சினை இனப்பிரச்சினைக்கு அடுத்த இடமே!

## பெரும்பான்மை சிங்கள மக்கள் கருதுகின்றனர்

இன்று நாட்டைப் பாதிக்கும் முக்கியமான பிரச்சினை - விலைவாசி உயர்வே என்று அதிகளவிலான சிங்கள மக்கள் கருதுவதாகத் தேசிய சமாதானப் பேரவை நடத்திய கருத்துக் கணிப்பு முடிவுகளிலிருந்து தெரியவந்திருக்கிறது.

48.2 வீதமான சிங்கள மக்கள் விலைவாசி உயர்வே முக்கியமான பிரச்சினை என்றும், 18.8 வீதமானோர் இனப்பிரச்சினையே முக்கியம் என்றும், 16.5 வீதமானோர் வேலையின்மையே முக்கிய பிரச்சனை என்றும் கூறியுள்ளனர்.

வட - கிழக்குப் பகுதிகளுக்கு வெளியே வாழும் மக்கள் இனப்பிரச்சினையைவிட விலைவாசியுயர்வையே முக்கிய பிரச்சினையாக கருதுவதாகவும், பேச்சுக்கு சிங்கள மக்களின் ஆதரவு ஏன் கிடைக்கவில்லை என்பதற்கு இந்த ஆய்வுகள் முக்கியத்துவம் பெறுவதாகவும் தேசிய சமாதானப் பேரவையின் தலைவரான ஜெகான் பெரேரா தெரிவித்தார்.

ஆனால், பெரும்பாலான தமிழ், முஸ்லிம் மக்கள் இனப்பிரச்சினையே முக்கியமான பிரச்சினை எனத் தெரிவித்துள்ளார்.

95.2 வீதமான தமிழர்களும், 91.8 வீதமான முஸ்லிம்களும், 89.9 வீதமான மலையகமக்களும் இனப்பிரச்சினையே முதன்மையானது எனக் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

ஆனால், கடந்த ஜனவரி 31 ஆம் திகதி முதல் பெப்ரவரி 14 ஆம் திகதிவரை நடத்தப்பட்ட முன்னைய கருத்துக் கணிப்பின்போது, 81.9 வீதமான சிங்கள மக்கள் சமாதானப்பேச்சுக்கு ஆதரவு தெரிவித்திருந்தனர். ஆனால், இப்போதைய கருத்துக் கணிப்பில்- இந்த ஆதரவுத் தொகை 83.7 வீதமாக அதிகரித்துள்ளது.

இதேவேளை நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்று 85.9 வீதமான தமிழர்களும், 79.6 வீதமான மலையகத் தமிழர்களும் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

அத்துடன், 82.7 வீதமான தமிழ் மக்கள்- புலிகளே ஏக பிரதிநிதிகள் என்று ஏற்றுக் கொண்டிருக்கின்றனர். ஆனால், 65 சதவீதமான சிங்கள மக்கள் இதனை நிராகரித்துள்ளனர்.

# ஞானச்சுடர் வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை மேம்பாட்டுப் பேரவையினர் நடாத்தும் வாராந்த நிகழ்ச்சியில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை நிகழ்வாக - பங்குனி மாத ஞானச்சுடர் இதழ் வெளியீடு நடைபெறவுள்ளது.

இந்நூலின் வெளியீட்டுரையை சீ.வைகுந்தசாமியும், மதிப்புரையை உதவிப் பணிப்பாளர் சிவமகாலிங்கமும் நிகழ்த்தவுள்ளார். (76)

# தமிழீழப் பெண்கள் எழுச்சிமாநாடு நாளைமுதல் இருநாட்கள் நடைபெறும்!

தமிழீழப் பெண்கள் எழுச்சி மாநாடு நாளைமுதல் இரண்டு நாட்கள் மட்டக்களப்பில் நடைபெறவிருப்பதாக விடுதலைப் புலிகளின் மகளிர் அரசியற்துறையினர் அறிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு, கல்லடி விபுலானந்தா இசை, நடனக் கல்லூரியில் நடைபெறவுள்ள தமிழீழப் பெண்கள் எழுச்சி மாநாடு நாளையும், நாளை மறுநாளும் நடைபெறும். இம்மாநாட்டுக்கு மட்டு - அம்பாறை மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் பானுகா தலைமை வகிப்பார்.

இந்த மாநாட்டில் வட-கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேலான பேராளர்கள் கலந்துகொள்ளவுள்ளதாகவும் - மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழினி மற்றும் மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர்கள் அனைவரும் இம்மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# இலங்கைக்கான உதவியை ஜேர்மனி அரசு அதிகரிக்கும்!

ஜேர்மனி அரசாங்கம்- இலங்கைக்கான உதவிகளை அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளது.

கொழும்பில் அண்மையில் நடைபெற்ற 2003/2004 ஆம் ஆண்டுக்கான பொருளாதார ஒத்துழைப்புப் பற்றிய இருதரப்புப் பேச்சின்போது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. நிதியமைச்சில் இதற்கான உடன்படிக்கையும் கைச்சாத்திடப் பட்டது. வறுமை ஒழிப்பு, போரால் பாதிக்கப்பட்டோருக்கு உதவுதல் போன்றவற்றுக்கு இந்த நிதி பயன்படுத்தப்படும்.

# ஏ~9 வீதியின் புனரமைப்புக்கு கிளாலியிலிருந்து மண் அகழ்வு

## கடல்நீர் உட்புகும் ஆபத்து

ஏ-9 புனரமைப்பு வேலைகளுக்குத் தேவையான பெருமளவு வெண் மணல் கிளாலிப் பகுதியிலிருந்து அள்ளப்படுகின்றது.

இதனால், கடல் நீர் தரைப்பகுதிக்குள் நுழையலாம் என மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

ஒருமுறை மண் அகழ்ந்து எடுக்கப்பட்ட அதேயிடத்தில் திரும்பவும் மண் அகழ்ந்து ஏற்றப்படுகின்றபோதிலும், இப்பகுதி நலன் பேணும் அமைப்புக்கள் தடுப்பதற்கு எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (115)

# இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு; புதிய கொள்கை அரசினால் வகுப்பு!

(கொழும்பு)

வேலையற்ற இளைஞர்களுக்கு நியாமான அடிப்படையில் வேலைகளை வழங்குவதற்கு ஒழுங்கான வேலைவாய்ப்புக் கொள்கையை அரசாங்கம் வகுத்து இருப்பதாக அமைச்சர் மகிந்த சமரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இதற்காக எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதிக்கு முன்னராக 17 வேலைவாய்ப்பு நிலையங்களை நிறுவத் திட்டமிட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

மூன்றாவது வேலைவாய்ப்பு நிலையத்தை மாத்தளையில் நேற்று முன்தினம் திறந்து வைத்து உரையாற்றிய போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# 'சினி யாத்ரா' திரைப்பட விழா பார்வைக்கு வரும் படங்கள்

இரவு வெகுநேரம் கடந்திருந்த வேளை, நடுத்தர வயதுடைய ஒருவன் (வில்லி அபேநாயக்க) தனது படுக்கையறையிலிருந்து தனது கடைசி பாவ ஒப்புக்கொள்ளலை எழுதிக் கொண்டிருந்தான். நான் உங்களுக்குக் கதையொன்றைச் சொல்லமுடியவில்லை என அவன சொல்கிறான். மாறாக என்னை மூழ்கடித்துக் கொண்டிருக்கும் குற்ற உணர்விலிருந்து விடுதலை பெறுவதற்காகவே நான் இதை எழுதிக் கொண்டிருக்கிறேன்.. பாவ ஒப்புக்கொள்ளலின் முடிவில் அவன் தன்னையே கொலை செய்வதற்குத் தீர்மானிக்கின்றான். அவன் தன்னுடைய கடந்தகால வாழ்க்கையை மீட்டுப்பார்க்கும்போது, அவன் எத்தகைய மனிதனாக இருந்திருந்தான் என்பதோடு அவனைப்

## நிதானய

பிடித்தாட்டிய வேட்கை, அவனை ஆட்கொண்டிருந்த தீய சக்திகள் அவனை எவ்வாறு அழிவுக்கு இட்டுச்சென்றன என்பன பற்றியெல்லாம் எம்மால் ஊகிக்கக்கூடியதாக உள்ளது.

இவற்றுக்கெல்லாம் காரணம் காட்டுப்பகுதியில் கற்பாறைக் குகையில் புதையலிருப்பதாகக் கூறிய பலநூற்றாண்டுகளுக்கு முந்திய சுவடியை அவன் படித்ததே. யாராவது ஒருவர் நரபலி தருவதற்குத் தயாராய் இருந்தால், அக்கற்பாறைக் குகையின் புதையல் எடுப்பதற்கான வழிதிறபடும். அந்த ஓலைச்சுவடி. பலி கொடுப்பதற்காக ஆளையும், இடத்தையும் மிக நுணுக்கமாக விபரித்திருந்தது. பலி கொடுக்கப்பட வேண்டிய ஆள் ஒரு இளம் பெண்ணாக இருப்பதோடு - நாடி, கழுத்து ஆகியவற்றில் நிரையாக மச்சம் இருக்கவேண்டும் என்றும் கூறப்பட்டிருந்தது.



லெஸ்ரர் ஜேம்ஸ்பீரிஸ்

ஓலையைப் படித்ததிலிருந்து அந்தப் பெண்ணையும், இடத்தையும் கண்டு அடைய வேண்டும் என்பதே அவனுடைய வாழ்க்கையை அரித்துக்கொண்டிருக்கும் வெறியாக மாறியது. கற்குகையைக் கண்டுபிடிப்பது இலகு. ஆனால், அந்த இளம்பெண் எங்கே இருக்கிறாள்? அப்படியான பெண் உண்மையில் வாழ்கிறாளா? அல்லது இது அவனுடைய குழம்பிப்போன மனதின் வெறும் கற்பனையா? அவளை அவன் பூந்தோட்டங்கள், குளக்கரைகள், கோயில்கள், படத்தியேட்டர்கள் ஆகிய எல்லா இடங்களிலும் தேடுகிறான். இந்த ஐதீகப் பெண் அவன் கனவுகளில் தோன்றி அவனை இம்சைப்படுத்துகிறாள்.

கடைசியாக அவன் மனோவியாதியில் வீழ்ந்துவிடுவானோ என்ற பயமே, அவளைப் பூரணமாகத் அவன் மனத்திலிருந்து அப்புறப்படுத்திவிட வைக்கிறது. ☆

# பிராந்திய மனிதஉரிமைக் குழுக்கள் அமைப்பது குறித்து நேற்று ஆராய்வு!

மனித உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கும், மனித உரிமைகளைத் தடையின்றிப் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதற்கும், மனித உரிமை பேணலை பிராந்திய மட்டங்களில் பேணுவதற்குமான செயற்குழுக்களை அமைப்பது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் - நேற்று யாழ். வை.எம்.சி.ஏ. கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதில் மனித உரிமைகள் பாதுகாப்பிற்கென பிராந்திய மட்டத்தில் செயற்படும் அரசசார்பற்ற நிறுவனங்களின் வலய அமைப்பு இணைப்பாளர் வசந்த பெரேரா, வளப்பயிற்சியாளர் சிறிதரன், சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள், யு.என்.எச்.சி.ஆர். பிரதிநிதிகள் யாழ்ப்பாண அரசசார்பற்ற, மனித நேய அமைப்புப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக்கலந்துரையாடலில் யாழ்ப்பாண மனித உரிமை ஆணைக் குழுவிற்குப் போதியளவு நிதியுதவி, ஆளணி என்பன கிடைக்காததால்-பணிகளைச் செவ்வனே செய்ய முடிவதில்லை மற்றும் பொலிஸ் நிலையங்களில் தமிழில் முறைப்பாடு செய்ய முடியாதநிலை, நகர மத்தியில் மாநகரசபையின் அனுமதி பெறாமலேயே இராணுவ முகாம் அமைக்க மேற்கொள்ளப்படும் திட்டம், செம்மணிப் புதைகுழிப் பிரச்சினை, வன்னிப்பகுதியிலிருந்து வரும் மக்கள் மீளக்குடியமரச் சொந்த இடங்களில் அனுமதிக்கப்படாமை போன்ற பிரச்சினைகள் குறித்து இக்கலந்துரையாடலில், அரசசார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள், மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர். (சு)



யாழ். மாநகரசபைக்குச் சொந்தமான காணியில் படைத்தளம் அமைப்பதற்கான முயற்சியில் படையினர் ஈடுபட்டுள்ளனர். படைத்தளம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ள யாழ்.கோட்டைக்கு அருகிலுள்ள, மாநகரசபைக் கட்டடம் அமைந்திருந்த பகுதியைப் படத்தில் காணலாம். (படம் - சுதர்சன்)

## இடி மின்னல் தாக்கியதில் ஒரே இரவில் 6 பேர் பலி!

வடமத்திய மாகாணத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு மின்னல் தாக்கியதில் ஆறு பேர் உயிரிழந்தனர். இவர்களில் அநேகமானோர் விவசாயிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

மதுரங்குழி, கிராந்துருகோட்டே என்ற இடத்தில் இடிமின்னலுக்குப் பயந்து குடிசையொன்றில் ஒதுங்கிய தாய், தந்தை மற்றும் மகள் என மூவர் மின்னல் தாக்கி மரணமாகினர். மகள் ஒருவர் மட்டும் இச்சம்பவத்தில் உயிர் தப்பினார்.

மெதிரிகிரியப் பகுதியில் மின்னல் தாக்கிய இன்னொரு சம்பவத்தின் ஆணும், பெண்ணும் உயிரிழந்தனர்.

## விபத்தில் காயம்

சாவகச்சேரி நகர்ப்பகுதியில் கடந்த 22 ஆம் திகதி நண்பகல் இடம்பெற்ற மோட்டார்சைக்கிள் விபத்தில் மூவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

சாவகச்சேரியைச் சேர்ந்த இ. ரதீஸ்குமார் (வயது 18), ஏ.நிஷ்யந்தன் (வயது 21), கொடிகாமத்தைச் சேர்ந்த கே.உமாமகேஸ்வரன் ஆகியோரே படுகாயமடைந்தவர்கள் ஆவார்.

# கொத்தலாவலவுக்கு டாக்டர் பட்டம் ஜே.வி.பி. சார்பு அமைப்பு எதிர்ப்பு!

பிரபல வர்த்தகரான லலித் கொத்தலாவலவுக்குக் கௌரவ டாக்டர் பட்டம் வழங்க ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம் தீர்மானித்துள்ளதற்குப் பல்கலைக் கழகத்திலுள்ள ஜே.வி.பி. சார்பு மாணவர் அமைப்பு ஒன்று கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

லலித் கொத்தலாவலவுக்குக் கௌரவ டாக்டர் பட்டம் வழங்குவதற்கு ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் வேந்தரான வண மெத்தகொட சுமண திஸ்ஸ தேரோ எதிர்ப்புத் தெரிவித்திருந்தார்.

ஆனாலும் துணைவேந்தர் டி.எஸ்.எபிடவற்ற பல்கலைக் கழகத்தின் செனட் கூட்டத்தில் இதற்கான முடிவுகளை எடுத்துள்ளார். இதற்கு ஜே.வி.பி சார்பு மாணவர் அமைப்புத் கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

செனட் கூட்டங்களில் எடுக்கப்படும் முடிவுகளில் தலையிடுவதற்கோ, எதிர்ப்பதற்கோ மாணவர்களுக்கு அதிகாரமில்லை என்று துணைவேந்தர் எபிடவற்ற தெரிவித்துள்ளார்.

(க)

## மாணவியை வல்லுறவுக்குட்படுத்திய பல்கலைக்கழக மாணவன் நீக்கம்!

பேராதனைப் பல்கலைக்கழகத்துக்குள் வைத்து ஜப்பானிய மாணவி ஒருவரைப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய மாணவனைப் பல்கலைக் கழகத்திலிருந்து நீக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஜூலை 21 ஆம் திகதி பல்கலைக்கழக வளாகத்துக்குள் வைத்து ஜப்பானிய மாணவி ஒருவரை - மாணவன் ஒருவன் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தினான். இதையடுத்து மாணவி கொடுத்த புகாரின்பேரில் மாணவன் கைதாகி, அவர்மீதான வழக்கு நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது.

மாணவன் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருக்கிறான். இந்தச் சம்பவம் தொடர்பாக பல்கலைக்கழக ஒழுங்காற்றுக்குழு மேற்கொண்ட விசாரணைகளின் முடிவில் மாணவனைப் பல்கலைக்கழகத்திலிருந்து நீக்கத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகத் துணைவேந்தர் பேராசிரியர் கபில குணசேகர தெரிவித்தார்.

## வவுனியாவில் 17 ஆயிரம் பேர் தொடர்ந்தும் நலன்புரிநிலையங்களில்

வவுனியா நலன்புரி நிலையங்களில் தற்போது 3500 குடும்பங்களைச் சேர்ந்த 17000 பேர் தங்கியுள்ளதாகப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, வவுனியா நலன்புரி நிலையங்களிலிருந்து 1821 பேர் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பியுள்ளனர். இவர்களில் அநேகமானோர் வன்னி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாவர்.

தற்போது வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்கள், தமக்கு வவுனியா நகரை அண்டிய பிரதேசங்களில் குடியிருப்புக்களை அமைத்துத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.





அண்மையில் நடைபெற்ற ஸ்கந்தா - மகாஜனாக் கல்லூரிகளுக்கிடையில் நடைபெற்ற 'கதாநாயகர்களின் மோதல்' கிரிக்கெட் போட்டியில் வெற்றிக்கிண்ணத்தைப் பகிர்ந்துகொண்ட அணித்தலைவர்களுக்கு வலி.வடக்கு வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சி.சிவமகாராஜா கிண்ணத்தை வழங்குவதையும், சகலதுறை வீரராகத் தெரிவுசெய்யப்பட்ட என்.அன்பழகனுக்கு சிறப்புவிருந்தினர் நாகமணி பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# சின்னஞ்சிறு செய்திகள்

## ஹிக்கடுவ நகர முதல்வர் சுட்டுக்கொலை

ஹிக்கடுவ நகர முதல்வர் காமினி பொலிகமுவ நேற்றுமுன்தினம் மாலை இனந்தெரியாதோரால் சுட்டுக்கொலை செய்யப்பட்டார்.

இந்தக் கொலை சம்பந்தமாகப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இனந்தெரியாத நபர் ஒருவர் நகர முதல்வரின் அலுவலகத்திற்குத் திடீரென வந்து அவரைச் சுட்டுக்கொன்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதையடுத்து நகரசபைப் பகுதிப் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு அதற்குள் யாரும் நுழையக்கூடாது எனப் பொலிஸார் உத்தரவிட்டுள்ளனர்.

## சாட்டியில் தவக்கால தியானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மறைமாவட்ட இளைஞர், யுவதிகளுக்கான தவக்காலத் தியானம் சாட்டி சித்தாத்திரை மாதா யாத்திரை ஸ்தலத்தில் இடம்பெறவுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியிலிருந்து மாலை 4 மணிவரை நடைபெறவுள்ள இத்தியானத்தில் பங்குகொள்வதற்கென யாழ்.பேராலயத்திலிருந்து போக்குவரத்து வசதிகள் செய்துகொடுக்கப்படவுள்ளது.

இத்தியானத்தில் பங்குகொள்ள விரும்புவோர் தமது பெயர்களை வெள்ளிக்கிழமைக்கு முன் பேராலயப் பணிமனையில் பதிவுசெய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது.

## பொன்னாலை வரதராஜப்பெருமாள் மகா கும்பாபிஷேகம்

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தான பரிவார ஸ்ரீதசாவதார மூர்த்திகளின் நூதன பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேக நிகழ்வு நாளை பகல் 11 மணியளவில் நடைபெறவுள்ளது.

நாளை காலை 8 மணிக்கு யாகபூசை, தீபாராதனை, திருவாய்மொழி பாராயணம், கும்பம் வீதிப் பிரதட்சணம் என்பன நடைபெற்று, 12 மணிக்கு மஹாகும்பாபிஷேக பூசைகள் நடைபெறும்.

## கலந்துரையாடல்

வெகுஜன தொடர்பியல் மேம்பாட்டு அமைப்பின் தமிழ் ஊடகவியலாளர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்குக் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்தில் சமாதான சூழ்நிலையிலும் தமிழ் ஊடகவியலாளர்கள் தாக்கப்படுவதால், அவர்களுக்கெதிரான அச்சுறுத்தல்கள் எதிர்காலத்தில் நிகழாத வண்ணம் தடுப்பதற்கு ஒரு செயற்குழு அமைக்கப்படவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் அனைத்துத் தமிழ் ஊடகவியலாளர்களையும், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கலந்துகொள்ளுமாறு வெகுஜனத் தொடர்பியல் மேம்பாட்டு அமைப்பு கேட்டுள்ளது.

## வலி.தெற்கு பிரதேச செயலக விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

வலி-தெற்குப் பிரதேச செயலகத்தில் 2003 ஆம் ஆண்டுக்கான வருடாந்த மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 1 மணிக்கு உதவிப் பிரதேச செயலர் எஸ்.ஆர். ஜெயப்பிரகாசம் தலைமையில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண மேலதிக அரசாங்க அதிபர் ப.திலகநாயகம் போலும், சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் றெஜினா இருதயநாதனும், யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி ஏ.எவ்.ஜே.ரூபசிங்கமும், ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர் க.சிவாஜியும், கௌரவ விருந்தினராக வலிகாமம் வடக்கு-தெற்கு அரசியற்துறைப் பொறுப்பாளர் ரமணனும் கலந்துகொள்ளவுள்ளனர். (சு)

## இலட்சார்ச்சனையும் சங்காபிஷேகமும்

(கைதடி)

கைதடி - கயற்றசிட்டி கந்தசுவாமி தேவஸ்தான இலட்சார்ச்சனை நிகழ்வு நாளை பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு, நாளொன்றுக்கு மூன்று ஆவர்த்தன விகிதம் ஆறு தினங்கள் நடாத்தப்பட்டு 7 ஆவது நாளாகிய ஏப்ரல் 2 ஆம் திகதி 1008 சங்காபிஷேகமும் நடைபெறவுள்ளது.

## நெடுந்தீவில் சீருடை முத்திரை விநியோகம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவுப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான சீருடை முத்திரைகள் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக வழங்கப்பட்டு வருகிறது.

முத்திரைகள் விநியோகித்து முடிந்ததும் சீருடைத் துணிகள் நெடுந்தீவு பல.நோ.கூ.சங்கக் கிளைகள் மூலம் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(113)

## மனிதஉரிமை ஆணைக்குழுவின் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் உயர் அதிகாரிகள் யாழ். மாவட்டத்திலுள்ள சகல பொது அமைப்புப் பிரதிநிதிகளுடனும், உயரதிகாரிகளுடனும் கலந்துரையாடலொன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

இக்கலந்துரையாடல் நாளை காலை 9.30 மணிமுதல் மாலை 5.30 மணிவரை வை.எம்.ஏ.சி மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் இலங்கை அரசியல் யாப்புச்சபையைச் சேர்ந்த கருணாகரன் சட்டத்தரணி ரெமிடியஸ், வவுனியா மனித உரிமை ஆணைக்குழுவின் இணைப்பதிகாரி தி.ரவீந்திரன் ஆகியோர் கலந்துகொள்வார் எனத் தெியவருகிறது.

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை

## மாணவர்களுக்கான முன் ஆயத்தப் பயிற்சிகள்





# மாணவர் மலர்

(1) கீழே தரப்பட்டுள்ள துண்டுப்பிரசுரத்தை வாசித்து வினாக்களுக்கு விடைதருக.

### துண்டுப் பிரசுரம்

விற்றமின் "A" பற்றி நீங்கள் சிந்தித்ததுண்டா!
விற்றமின் "A" குறைபாட்டினால் -

☆ மாலைக்கண் நோய்

☆ பிற்றோ புள்ளிகள் காரணமாகக் கண் குருடாகும் சாத்தியக் கூறுகளும் உண்டு.



விற்றமின் "A" யை எமக்குத் தருவன எவை?

*பச்சை நிறக் காய்கறிகளும் மஞ்சள் நிறப் பழங்களும் விற்றமின் "A" தனை அள்ளித் தந்திடும்.*

**இலங்கையில் ஒவ்வொரு மூன்று குழந்தைகளில் ஒரு குழந்தை விற்றமின் "A" குறைபாட்டினால் அவதியுறுகின்றது.**

*- வைத்தியப் பரிசோதனை நிலையம்.*

விற்றமின் "A" குறைபாடுடையோர் வைத்திய ஆலோசனையுடன் விற்றமின் "A" ஐப் பெற்றுக்கொள்ளுங்கள்.



**ஆலோசனை**

- கர்ப்பிணித் தாய்மார்கள் விற்றமின் "A" அதிகமுள்ள உணவுகளை அதிகமாக உட்கொள்ளவும்.
- திரிபோஷா போன்ற உணவுகளைச் சேர்த்துக் கொள்வது மிகவும் நல்லது.
- குழந்தைகளுக்கு 4 மாதங்கள் பூர்த்தியாகும்வரை தாய்ப்பாலினை மட்டும் கொடுங்கள். அதன் பின் தாய்ப்பாலுடன் சேர்த்து மஞ்சள் நிறப் பழங்களும், பச்சைக் காய்கறிகளும் அதிகளவு கொடுங்கள்.

**விற்றமின் "A" குறைபாடு பற்றிய சந்தேகம் ஏற்பட்டால் உடனடியாக மருத்துவ ஆலோசனையைப் பெறுங்கள்.**

*தகவல்:- சுகாதார அமைச்சு.*

(1) மேலே தரப்பட்டுள்ள துண்டுப்பிரசுரம் எதைப் பற்றியது?
1) விற்றமின் "A" விற்பனை தொடர்பானது.
2) விற்றமின் "A" உணவுப் பொருட்கள் தொடர்பானது.
3) விற்றமின் "A" குறைபாடு தொடர்பான விழிப்புணர்வு பற்றியது.
4) விற்றமின் "A" பாவனை தொடர்பானது.

(2) விற்றமின் "A" குறைபாட்டினால் ஏற்படும் நோய்.
1) கண் நோய் 2) மாலைக்கண் நோய்
3) செங்கமாரி 4) மூளைக்காய்ச்சல்

(3) பின்வரும் கூற்றுக்களில் சரியான கூற்று.
A) பழங்களில் விற்றமின் "A" அதிகமாகக் காணப்படுகின்றது.
B) எல்லாப் பழங்களிலும் விற்றமின் "A" உள்ளது.
C) பச்சை நிறக் காய்கறிகளில் விற்றமின் "A" உள்ளது.
D) மஞ்சள்நிறப் பழங்களில் விற்றமின் "A" அதிகமுள்ளது.

(1) A யும் D யும் (2) B யும் C யும்
(3) C யும் D யும் (4) A யும் C யும்

4) விற்றமின் "A" அதிகமுள்ள உணவுகளை உண்ண வேண்டியவர்கள்
1) சிறுவர்கள் 2) கர்ப்பிணித் தாய்மார்
3) குழந்தைகள் 4) முதியவர்கள்

5) பின்வருவனவற்றுள் சரியான விடை
1) இலங்கையில் விற்றமின் "A" யினால் எவரும் பாதிக்கப்படவில்லை.
2) இலங்கையில் சில பகுதிகளில் விற்றமின் "A" யினால் பாதிக்கப்பட்டவர்கள் உள்ளனர்.
3) இலங்கையில் வாழ்பவர்கள் பழங்களை அதிகம் உண்பதில்லை.
4) இலங்கையில் ஒவ்வொரு மூன்று குழந்தைகளில் ஒரு குழந்தை விற்றமின் "A" குறைபாட்டினால் பாதிக்கப்படுகின்றது.

6) விற்றமின் "A" குறைபாடு தொடர்பான சந்தேகம் ஒருவருக்கு ஏற்பட்டால்
1) பழங்கள் சாப்பிட வேண்டும்.
2) விற்றமின் "A" யினை உட்கொள்ள வேண்டும்.
3) தாய்ப்பால் கொடுக்க வேண்டும்.
4) மருத்துவ ஆலோசனையைப் பெறவேண்டும்.

7. மேலே தரப்பட்டுள்ள துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டவர்கள் யார்?
1) வைத்தியப் பரிசோதனை நிலையம்
2) சுகாதார அமைச்சு
3) மாநகரசபை
4) விழிப்புணர்வு அமைப்பு

8) பின்வரும் தமிழ்ச்சொற்களுக்குரிய ஆங்கிலப் பெயர்களை எழுதுக.
1) குழந்தை......................
2) பழங்கள்..........................
3) மஞ்சள் நிறம்..........................
4) பச்சைநிறம்............................
5) வைத்தியர்.............................
6) மாதங்கள்..............................

(2) பின்வரும் வாக்கியங்களிலுள்ள இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.

1. நாங்கள் விளையாட்டு மைதானத்திற்குச் ................
1) சென்றேன் 2) சென்றோம்
3) சென்றீர்கள் 4) சென்றார்கள்

2) ............................... புத்தகம் வாசித்தீர்கள்.
1) நீ 2) நான்
3) நீங்கள் 4) அவர்கள்

3) அவர்கள் அந்தத் தோட்டத்தைச் சுத்தம் .......................
1) செய்தான் 2) செய்தார்கள்
3) செய்தீர்கள் 4) செய்வோம்

4)........................... சுற்றுலா சென்றேன்.
1) நான் 2) நாம்
3) அவன் 4) அவர்

5) ..................... ஓவியம் வரைந்தான்.
1) நான் 2) நாங்கள்
3) அவள் 4) அவன்

(3) பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் அடையாளமிடுக.

1) அலுமினியம் துருப்பிடித்தது. (..........)
2) களிமண்ணில் சட்டி, பானை, செங்கல், ஓடு என்பவற்றைச் செய்யலாம் (..........)
3) தாமரை, அல்லி முதலியன நீர்வாழ் தாவரங்களல்ல. (..........)
4) சுத்தமான நீருக்கு நிறம், மணம், சுவை என்பன இல்லை. (..........)
5) நாம் கொதித்தாறிய நீரையே பருகுதல் வேண்டும். (..........)
6) காசித்தும்பைச் செடியின் கனிகள் வெடித்துச் சிதறும். (..........)
7) ஆடுமாடுகளின் தோல்களில் நாயுருவி ஒட்டிக்கொள்ளும். (..........)
8) நிலக்கீழ்த்தண்டு மூலம் இஞ்சி உண்டாவதில்லை. (..........)
9) வெட்டுக்கிளி தாவரங்களின் இலையை உண்ணும். (..........)
10) மின்சாரத்தைப் பயன்படுத்தி மின்குமிழ்களை ஒளிரச் செய்ய முடியாது. (..........)

(4) கீழே தரப்பட்டுள்ள தாவரத்தின் படத்தை நன்கு அவதானியுங்கள்.



1) இத்தாவரத்தின் பெயர் என்ன?
..................................................
2) இத்தாவரத்தின் பயன்கள் மூன்று தருக?
1)
..................................................
2)
..................................................
3)
..................................................

5) *"நான் ஒருநாள் வயலுக்குச் சென்றேன்"* என்ற தலைப்பில் ஆறு வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தபட்சம் நான்கு சொற்களையாவது கொண்டிருத்தல் வேண்டும்.
1) ..................................................
2) ..................................................
3) ..................................................
4) ..................................................
5) ..................................................
6) ..................................................

வி.என்.எஸ்.உதயசந்திரன்
B.A. (Cey) B.Ed(Hons) Dip.in.Ed.



# கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சை

## இரசாயனவியல் - 1

சென்றவாரத் தொடர்ச்சி

## மாதிரி வினாத்தாள்

41 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிப்பதற்கான அறிவுறுத்தற் சுருக்கம்.

a, b ஆகியன மாத்திரம் திருத்தமானவை - 1
b, c ஆகியன மாத்திரம் திருத்தமானவை - 2
c, d ஆகியன மாத்திரம் திருத்தமானவை - 3
d, a ஆகியன மாத்திரம் திருத்தமானவை - 4
வேறு தெரிவுகளின் சேர்மானம் திருத்தமானவை - 5

41. பொதுவாக X என்னும் அனுவினது குறியீடு ${}^{B}_{A}X$ ஆகும். இக்கூற்று தொடர்பாகச் சரியானவை.
a) திணிவெண் B எப்போதும் அவ்வணுவின் சாரணுத் திணிவுக்குச் சமனாகும்.
b) திணிவெண் B எப்போதும் அவ்வணுவிலுள்ள P+N கூட்டுத்தொகைக்குச் சமனாகும்.
c) அனுவெண் A எப்போதும் அவ்வணுவிலுள்ள இலத்திரன் எண்ணிக்கைக்குச் சமனாகும்.
d) அனுவெண் A எப்போதும் அவ்வணுவிலுள்ள நியூத்திரன் எண்ணிக்கைக்குச் சமனாகும்.

42. திணிவு நிறமாலைமானி தொடர்பாகப் பின்வரும் கூற்றுக்களில் தவறானவை.
a) மூலகமொன்றிலுள்ள சமதானிகளின் எண்ணிக்கை கணிக்கப்படலாம்.
b) ஒவ்வொரு சமதானியினதும் சார்வளன் கணிக்கப்படலாம்.
c) ஒவ்வொரு சமதானியினதும் சாரணுத்திணிவு கணிக்கப்படலாம்.
d) மூலகத்தின் சாரணுத்திணிவு கணிக்கப்படலாம்.

43. $S_2O_8^{2-} + 2Fe^{2+} \longrightarrow 2SO_4^{2-} + 2Fe^{3+}$
இத்தாக்கம் தொடர்பான கூற்றுக்களில் சரியானவை.
a) S - தாழ்த்தலடையும் b) O- ஒட்சியேற்றமடையும்
c) O - தாழ்த்தலடையும் d) $Fe^{2+}$ - ஒட்சியேற்றடையும்

44. பின்வரும் எச்சேர்வைகளின் கரைசல்கள் நீலப்பாசிச் சாயத்தாளை சிவப்பாக்கும்.
a) $NH_4CN$ b) $CH_3COONH_4$
c) $NH_4ClO_4$ d) $NH_4I$

45. tetra ammine copper (ii)Sulphate (vi) சேர்வையின் பிரதான அயன்கள்
a) $Cu^{2+}$ b) $So_4^{2-}$ c) $Cu(NH_3)_4^{2+}$ d) $NH_4^+$

46. HI இற்கும் $HIO_3$ இற்கும் $H_2SO_4$ முன்னிலையில் நடைபெறும் தாக்கத்தில் பின்வரும் எவ்விளைவுகள் தோன்றும்.
a) $I_2$ வெளியேறும் b) $H_2O$ வெளியேறாது
c) இது அமில மூலத்தாக்கமாகும்
d) அயடின் ஒட்சியேற்றலுக்கும் தாழ்த்தலுக்கும் உட்படும்.

47. $FeCl_2$, $Fecl_3$ என்பவற்றை வேறுபிரித்தறிய பின்வருவனவற்றுள் எவற்றை நேரடியாகப் பயன்படுத்தலாம்?
a) NaOH கரைசல் b) $NH_4CNS$ கரைசல்
c) $K_2SO_4$ கரைசல் d) $(NH_4)_2S$ கரைசல்

48. மின்பகுப்பின்போது மின்பொருட்களின் அயன்கள் எதிரான ஏற்றமுள்ள மின்வாய்களை நோக்கிக் குடிபெயரும். பின்வரும் கூற்றுக்களில் சரியானவை.
a) ஒரு மின்வாயைச் சுற்றி ஏற்படும் செறிவு குறைதலின் அளவு அம்மின்வாயை விட்டகலும் அயன்களின் வேகத்திற்கு விகிதசமன்.
b) இரு மின்வாய்களிலும் இறக்கப்படும் அயன்களின் அளவுகள் சமனானவை.
c) அயன்கள் யாவற்றிலும் வேகங்கள் சமனானவை.
d) கதோட்டில் இறக்கப்படும் அயன்களின் மொத்த எண்ணிக்கை அனோட்டை விட்டகலும் அயன்களின் மொத்த எண்ணிக்கைக்குச் சமன்.

49. $2AX_{3\,(aq)} + BX_{2(aq)} \rightleftharpoons 2AX_{2(aq)} + BX_{4(aq)}$
மேலுள்ள தாக்கம் தொடர்பான கூற்றுக்களில் சரியானவை.
a) முற்தாக்க வேகம் எப்போதும் $(AX_3)^2$ இற்கு நேர்விகித சமன்
b) முற்தாக்க வேகம் எப்போதும் $(BX_2)$ இற்கு நேர்விகித சமன்.
c) பிற்தாக்க வேகம் சிலவேளைகளில் $(AX_2)^2 \times BX_4$ இற்கு நேர்விகித சமன்.
d) தாக்க வேகத்தைக் கொள்கை ரீதியாகத் துணிய முடியாது.

50. கலக்கும் இயல்பற்ற இரு திரவங்கள் பற்றிய பின்வரும் கூற்றுக்களில் சரியானவை?
a) இரு திரவங்களையும் கலக்கும்போது அவற்றின் ஆவியமுக்க சார்பிறக்கம் குறையும்.
b) கலவையின் மொத்த ஆவியமுக்கம், இரண்டினது ஆவியமுக்கங்களின் கூட்டுத்தொகைக்குச் சமன்.
c) கலவையைப் பகுதிபடக் காய்ச்சி வடிக்கும்போது கலவையானது அவற்றின் தனித்தனி ஒத்திசை நிலையிலும் குறைந்த வெப்பநிலையில் கொதிக்கும்.
d) கலவை உயர் வெப்பநிலையிலேயே கொதிக்கும்.

51 தொடக்கம் 60 வரையுள்ள வினாக்களுக்கான அறிவுறுத்தல்கள்

| தெரிவுகள் | முதலாம்கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| (1) | உண்மை | உண்மையாக இருந்து முதலாம் கூற்றுக்குத் திருத்தமான விளக்கத்தைத் தருவது |
| (2) | உண்மை | உண்மையாக இருந்து முதலாம் கூற்றுக்குத் திருத்தமான விளக்கத்தைத் தராதது |
| (3) | உண்மை | பொய் |
| (4) | பொய் | உண்மை |
| (5) | பொய் | பொய் |

| முதற் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|
| 51. அனு அமைப்பிற்கு ஆதாரமாக அமைவது காலல் நிறமாலையாகும். | காலல் நிறமாலையில் சீரான இடைவெளிகளில் கோடுகள் பெறப்படுகின்றன. |
| 52. தூய நீரின் கொதிநிலை உயர்வானது | நீர் மூலக்கூறுகளுக்கு இடையே ஐதரசன் பிணைப்புண்டு. |
| 53. S குழு மூலகங்களின் நீர்க் கரைசலை மின்பகுத்து உலோகங்களாகப் பெறலாம். | S குழு மூலகங்கள் சிறந்த தாழ்த்தும் கருவிகளாகும். |
| 54. ஒரு அனுவின் S, P ஓபிற்றல்கள் கலப்பில் ஈடுபடுகின்றன. | உருவாக்கும் SP கலப்போபிற்றலின் சக்தி - ஆரம்ப S,P ஒபிற்றல்களின் சக்தியிலும் உயர்வானது. |
| 55. பென்சீன் மூலக்கூறு ஒன்றில் மூன்று பை பிணைப்புக்கள் உண்டு. | பென்சீன் மூலக்கூறு ஒன்றில் மூன்று சோடி பை இலத்திரன்கள் உண்டு. |
| 56. $1X10^{-3}$ M HCL கரைசலுடன், $1X10^{-3}$ M NaOH கரைசலை நியமிப்புச் செய்ய புரோமோ தைமோல் நீலம் (6-8) உகந்த காட்டியாகும். | HCl கரைசல் எதிர் NaOH கரைசல் நியமிப்பில் சமவலுப் புள்ளி pH எப்போதும் 7 ஆகும். |
| 57. ஏபர் முறையில் $NH_3$ உற்பத்தியில் Fe ஊக்கியாகப் பயன்படுகிறது. | Fe இத்தாக்கத்தில் ஏவற் சக்தியைக் குறைத்து விளைவைக் கூட்டுகிறது. |
| 58. அசற்றலீன் வளியில் தகனமடையும்போது காபன் புகை தோன்றும். | அசற்றலீன் ஒரு நிரம்பாத ஐதரோக்காபன் ஆகும். |
| 59. தொடுகை முறை உற்பத்தியில் உயர் அமுக்கம் பயன்படுத்தப்படுவதில்லை. | சாதாரண வளிமண்டல அமுக்கத்திலேயே பெருமளவு $So_2$ ஆனது $So_3$ ஆக மாற்றமடையும். |
| 60. அமோனியம் அசற்றேற்று நீர்க் கரைசல் ஆனது தாங்கற் கரைசலாக தொழிற்படக் கூடியது. | அமோனியம் அசற்றேற்று ஆனது நீர்க்கரைசலில் முற்றாகப் பிரிகையடையக் கூடியது. |

சிவ. சிவபாலா
B.Sc., Dip. in Ed., M.Ed.
(ஆசிரியர் - திருக்குடும்பக் கன்னியர்மடம்)

# கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சை

## இணைந்த கணிதம் II

## மாதிரி வினாத்தாள்

01.

a) ஓர் இலேசான இழையின் இரண்டு முனைகளும் ஒரே கிடைமட்டத்தில் A,B எனும் இரு புள்ளிகளுக்கு இணைக்கப்பட்டுள்ளன. முறையே 8, 9 கிராம் நிறையுடைய P,Q என்னும் இரண்டு துணிக்கைகள் இழையின் நீளத்தின் வழியே இணைக்கப்பட்டுள்ளன. சமநிலையில் P,Q ஆகியவற்றினூடாகச் செல்லும் நிலைக்குத்துகள் A,B ஐ செங்குத்தாக முச்சமகூறிடுகின்றன. A,B யிலிருந்து P,Q என்பவற்றின் ஆழங்களின் விகிதம் 25:26 எனக் காட்டுக.

b) நிலையியல் உராய்வுக் கோணத்தை வரையறுக்க.
சீரான கோல் ஒன்று அதன் மேல் முனை கரடான நிலைக்குத்துச் சுவர் ஒன்றுக்கு எதிரே தாங்கியும், கீழ் முனை கரடான கிடைத்தளம் ஒன்றின் மீது இருக்க, நிலைக்குத்துத் தளம் ஒன்றிலே ஓய்விலிருக்கிறது. நிலைக்குத்துடன் கோலின் சாய்வு $\propto (< \pi/2)$ ஆக இருக்கும்போது, கோலானது இரு முனைகளிலும் எல்லைச் சமநிலையில் இருக்கின்றது. இரு முனைகளுக்கும் உராய்வுக் குணகம் சமம். கேத்திரகணித முறையாகவோ அல்லது வேறு முறையாகவோ உராய்வுக்கோணம் $\propto/2$ என நிறுவுக.

02)

a) a சம இடைவெளிவிட்டு வைக்கப்பட்டுள்ள மூன்று திரைகளினூடாகத் துப்பாக்கிக் குண்டொன்று சுடப்படுகின்றது. துப்பாக்கியிலிருந்து புறப்பட்டு முறையே $t_1$, $t_2$, $t_3$ செக்கன்களில் குண்டு திரைகளைக் கடக்கின்றது. அமர்முடுகல் சீரானதெனக் கொண்டு,

அது $$\frac{2(t_3-2t_2+t_1)a}{(t_3-t_1)(t_3-t_2)(t_2-t_1)}$$ எனக் காட்டுக.

b) O எனும் புள்ளியிலிருந்து துணிக்கை v கதியுடன் கிடையுடன் $\propto$ ஏற்றக் கோணத்தில் எறியப்படுகிறது. O விற்கு மேலே துணிக்கை அடையும் அதியுயர் உயரம் H ஆகவும், O வினூடாக கிடைத்தளத்தில் வீச்சு R ஆகவும் இருப்பின்

(i) $H = \frac{V^2\sin^2\propto}{2g}$ (ii) $R = \frac{V^2\sin 2\propto}{g}$

எனவும் காட்டுக

$16H^2-8R_0H+R=0$ என உய்த்தறிக. இங்கு R என்பது தரப்பட்ட எறியற் கதிக்கான உயர் வீச்சு ஆகும்.
$R_0=200$ m, $R=192$ m எனத் தரப்படின் H இன் இரு இயல்தகு பெறுமானங்களையும் அவற்றிற்கு ஒத்த $\propto$ இன் பெறுமானத்தையும் காண்க

03)

Bயில் செங்கோணத்தைக் கொண்ட ABC என்னும் ஆப்பு, தளமுகம் AC அழுத்தமான கிடைத்தளத்தில் இருக்க வைக்கப்பட்டுள்ளது. $m_1$, $m_2$ திணிவுடைய துணிக்கைகள் Bயில் வைக்கப்பட்டு ஒரே நேரத்தில் $m_1$, BA வழியாகவும் $m_2$, BC வழியாகவும் இயங்கவிடப்பட்டன. தொடரும் இயக்கத்தில் $m_1$, $m_2$ ஐ இணைக்கும் கோடு கிடையாக இருப்பதற்கு

$$\tan^2\propto = \frac{M+m_2}{M+m_1}$$ எனக் காட்டுக

(இங்கு M-ஆப்பின் திணிவு, $\widehat{BAC} = \propto$ ஆகும்)

04)

a) உயர்த்தி ஒன்றின் மேல் நோக்கிய இயக்கம் மூன்று கட்டங்களில் நடைபெறுகின்றது. கட்டம் I இல் அது சீரான ஆர்முடுகல் f உடன் இயங்குகிறது. கட்டம் II இல் அது சீரான வேகத்துடன் இயங்குகின்றது. கட்டம் III இல் அது சீரான அமர்முடுகல் 2f உடன் இயங்குகிறது. உயர்த்தியின் கூரையிலிருந்து விற்றராசு ஒன்றினால் பொருள் ஒன்று தொங்கவிடப்பட்டுள்ளது. கட்டம் I இல் தராசின் வாசிப்பு 36 kg உம், கட்டம் III இல் தராசின் வாசிப்பு 18 kg உம் ஆகும். கட்டம் II இல் உள்ள தராசின் வாசிப்பையும் f இன் பெறுமானத்தையும் காண்க

b) துணிக்கை ஒன்று கிடையுடன் $\theta$ சாய்விலுள்ள கரடான தளம் ஒன்றின் வழியே சீரான வேகத்துடன் கீழ் நோக்கி வழுக்கிச் செல்கிறது. தளத்துடன் சாய்வு $k\theta$ விற்கு அதிகரிக்கப்படுமெனின் துணிக்கையின் ஆர்முடுகல்,

$$\frac{g\sin[(K-1)\theta]}{\cos\theta}$$ எனக் காட்டுக

(தொடரும்)

S. மணிவண்ணன்

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

கடிந்த கடிந்துஒரார் செய்தார்க்கு அவைதாம்
முடிந்தாலும் பீழை தரும்

- திருக்குறள்

# நமது நோக்கு

## மற்றுமொரு தடைக்கல்!

சன அடர்த்தி மிக்கதும் - மக்களது அவசியத் தேவைகளுக்குமான யாழ். நகரின் மத்தியில் - போக்குவரத்துக்கு இடைஞ்சலாகவும், மக்களின் சுமுகமான வாழ்வைப் பாதிப்பதாகவும் - அரச, தனியார் கட்டடங்களைத் தம்வசப்படுத்தி வைத்திருக்கும் படையினர் - தற்போது - நகரின் மற்றுமொரு முக்கிய பகுதியில் தமது படைத் தளத்தை அமைத்துக் கொள்வதற்குத் தீவிரமான முயற்சிகளில் இறங்கியிருக்கின்றனர்.

யாழ். மாநகரசபைக்குச் சொந்தமான சுப்ரமணியம் பூங்காவைக் குத்தகை அடிப்படையில் சுவீகரித்து - அதனை இராணுவத் தளமாக்குவதற்கான நடவடிக்கைகள் முனைப்புப்பெறுவதால் -

மக்களது குடிமனைகள், நடமாடும் பகுதிகள் இராணுவ வலயமாகும் ஆபத்து ஏற்படுவதுடன் - அப்பகுதியில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டு வரும் அபிவிருத்திசார் செயற்பாடுகள் அனைத்தும் இடைநிறுத்தப்படும் அவலமும் தோன்றியுள்ளது.

சுப்ரமணியம் பூங்காவானது - யாழ்.கோட்டை, இராணுவத் தளமாக விஸ்வரூபம் எடுத்ததன் பின்னர் தனது வனப்பு யாவற்றையும் இழந்து, புதர்களும், பற்றைகளும் மண்டிக்கிடக்கும் பகுதியாக மாறிவிட்டதன் பின்னர் -

அதனை - மீண்டும் செம்மையுற உருவாக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவந்த நிலையில், அதற்குச் சர்வதேச தொண்டர் அமைப்பொன்று உதவமுன்வந்த கட்டத்தில் - அனைத்தும் பாழாகக் கூடியதாக - இராணுவத்தரப்பின் நடவடிக்கைகள் அமைகின்றன.

ஏற்கனவே - யாழ்.குடாநாட்டில் மக்கள் குடிமனைகளை ஆக்கிரமித்தும், உயர்பாதுகாப்பு வலயங்கள் என அமைத்தும் - சுமுக வாழ்வு தோன்றுவதற்குப் பாரிய முட்டுக்கட்டைகளைப் போட்டுவைத்திருக்கும் படையினர் - சமாதான காலத்திலும், அதனைத் தொடர்வதற்கு முயற்சிப்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்லவே.

அதிலும் - யாழ்.மாநகரசபையின் சொத்தாக சுப்ரமணியம் பூங்கா இருக்கின்றபோது - அச்சபைக்கான உரிய நிர்வாகம் புதிய தேர்தல் ஒன்றின் மூலம் பதவி ஏற்கும் காலத்திற்கு முன்பாக - ஆளுநரின் உத்தரவு என்ற பெயரில் - பூங்கா அமைந்திருக்கின்ற காணியைப் பெற்றுக்கொள்ள முயற்சிப்பது - திட்டமிட்ட வகையில் மக்கள் சொத்தை அபகரிக்கும் செயலாகவே அமைய முடியும்.

அதேவேளை - சுப்ரமணியம் பூங்காப் பகுதியானது - அருகே யாழ்.மாவட்டத்தின் பிரபல கல்லூரி ஒன்றினையும், பொது நூலகத்தையும், துரையப்பா விளையாட்டரங்கையும், திறந்தவெளி சினிமா அரங்கொன்றையும் கொண்டிருப்பதனால் - அப்பகுதியில் அமைக்கப்படும் படைத்தளம் - இவற்றையும் நேரடியாகவே பாதிக்கும் என்பதில் ஐயமில்லை.

ஏற்கனவே - பருத்தித்துறையில் ஹாட்லிக் கல்லூரியோடும், மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையோடும் அமைக்கப்பட்டிருக்கும் படைத்தளம் - அங்கு மாணவர்களுக்குக் கற்றலில் ஏற்படுத்திவருகின்ற பிரச்சினைகளும் நெருக்கடிகளும் -

மட்டக்களப்பு நகரப்பகுதியில், வெபர் விளையாட்டரங்கம் இராணுவ முகாமாக மாற்றப்பட்டதால் - அங்கு நுழைவோர் உடற்சோதனைக்குட்படுவதும், மாலை ஆறு மணிக்குப் பின்னர் - விளையாட்டரங்கில் நுழைவதற்குப் பொதுமக்கள் அனுமதிக்கப்படாததும் - எச்சரிக்கைகளாகவே கொள்ளப்பட வேண்டும்.

இந்த வகையில் - சுப்ரமணியம் பூங்காவில் படைத் தளம் அமைக்கும் விவகாரம் - ஒரு நீண்ட நெருக்கடிக்கான, பிரச்சினைக்கான தொடக்கமாகவே அமைந்துவிடும் என்பதை சகலரும் கருத்திற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

# மத்தியகிழக்கு இலங்கையர் நலன்; ஆராய எம்.பிக்கள் குழு செல்லும்!

(கொழும்பு)

ஈராக் மீதான அமெரிக்கத் தாக்குதல்கள் தீவிரமடைந்துள்ளதையடுத்து மத்திய கிழக்கிலுள்ள இலங்கையர்களின் பாதுகாப்புத் தொடர்பாக ஆராய 16 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு அங்கு செல்லவுள்ளது.

மத்தியகிழக்கு நாடுகளில் பணியாற்றும் இலங்கையர்களின் பாதுகாப்புத் தொடர்பான நலன்களைக் கவனிக்கவே நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழுவை அனுப்பிவைக்கத் தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு பிரதி அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தலைமையிலான நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழு சவூதி அரேபியா, கட்டார், குவைத், ஜோர்தான் ஆசிய நாடுகளுக்குச் சென்று, அங்கு பணியாற்றும் இலங்கையரின் பாதுகாப்புத் தொடர்பான விரிவான ஆய்வுகளைச் செய்யுமெனவும் அறிவிக்கப்படுகிறது.

# விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த ரின்மீன் இறக்குமதிக்கு அரசு அனுமதி!

தகரத்தில் அடைக்கப்பட்ட மீனின் இறக்குமதிக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாட்டை நீக்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்துவதற்காகவே அரசாங்கம் இந்த முடிவை எடுத்துள்ளது.

இறக்குமதி செய்யப்படும் தகரத்தில் அடைக்கப்பட்ட மீன்களுக்கு, அரசாங்கம் முன்னர் கடும் கட்டுப்பாடு விதித்திருந்தது. 70 சதவீதமளவுக்கு மீன், தகரத்தில் அடைக்கப்பட்டிருக்க வேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது. ஆனால் அநேகமான நாடுகளில் 60 சதவீதமளவுக்கே மீன் தகரத்தில் அடைக்கப்படுகின்றது.

சிலி நாட்டில் மட்டுமே 70 சதவீதமான மீன்களை உள்ளடக்கிய கொள்கலன்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதனால் சிலியிலிருந்து மட்டுமே இதுவரை தகரத்தில் அடைக்கப்பட்ட மீன்கள் இறக்குமதி செய்யப்பட்டன.

உள்ளூரில் மீன் உற்பத்தி போதுமானதாக இல்லாதிருப்பதால் - விலை அதிகரித்து, விலைவாசி உயர்வை ஏற்படுத்துகின்றது. இதனைத் தவிர்க்கவே அரசாங்கம் வேறுநாடுகளிலிருந்தும் தகரத்தில் அடைத்த மீன்களை இறக்குமதி செய்ய அனுமதியளித்துள்ளது. ஆனால், இறக்குமதியாகும் இந்த மீன்களின் உள்ளடக்கம் குறித்துத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்க வேண்டுமென்று அரசு இறக்குமதியாளர்களுக்குக் கட்டுப்பாடு விதித்துள்ளது.

# இனப்பிரச்சினைத் தீர்வு விவகாரத்தில் சுதந்திரக்கட்சி-ஜே.வி.பிக்குள் இழுபறி!

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான இணக்கத்தினை உருவாக்குவதில் இழுபறிநிலை ஏற்பட்டுள்ளதால், ஜே.வி.பிக்கும், சுதந்திரக் கட்சிக்கும் இடையிலான கூட்டணியின் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவது தாமதமாகி வருகின்றது.

பொதுஜன ஐக்கிய முன்னணியால் 1998 ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட இனப்பிரச்சினைத் தீர்வுத்திட்டத்தை - ஜே.வி.பி. முன்னர் நிராகரித்திருந்தது. இப்போதும் பொதுஜன ஐக்கிய முன்னணி இந்தத் தீர்வுத்திட்டத்தையே இனப்பிரச்சினைத் தீர்வாக முன்வைத்துள்ளது.

ஜே.வி.பி. இந்தத் தீர்வுயோசனையை ஏற்க மறுத்தால், இருதரப்புப் புரிந்துணர்வு உடன்பாட்டில் கையெழுத்திடமாட்டேன் என ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக இருகட்சிகளுக்குமிடையில் எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்குள் இணக்கப்பாடுகள் எட்டாவிட்டால், பாரிய முரண்பாடுகள் அதிகரிக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. ஆனால், அதற்குள் இணக்கப்பாடு எட்டப்பட்டுவிடும் என விமல் வீரவன்ச தெரிவித்தார்.

இதனிடையே சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஜே.வி.பிக்கும் இடையிலான கூட்டணி தொடர்பான பேச்சுக்கள் இன்றும் நடைபெறவுள்ளன.

இந்தப் பேச்சுக்களில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கலந்துகொள்ளலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் பேச்சுக்களில் சுதந்திரக்கட்சி சார்பில் சரத் அமுனுகம, மைத்திரிபால சிறிசேன, மங்கள சமரவீர ஆகியோரும் - ஜே.வி.பியின் சார்பில் ரில்வின் சில்வா, விமல் வீரவன்ச ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளதாக தெரியவருகின்றது. இந்தப் பேச்சுக்களில் கூட்டணியில் பொருளாதாரக் கொள்கையை வகுப்பது தொடர்பாக முக்கிய கவனம் செலுத்தப்படும் எனவும் தெரியவருகிறது.

# கடலில் காணாமற்போன கணவனை தேடித் தருமாறு மனைவி முறைப்பாடு

கடந்த 1999 ஆம் ஆண்டு நாச்சிக்குடாவிலிருந்து இந்தியா செல்லமுற்பட்டபோது கடலில் காணாமற்போன தனது கணவரைத் தேடித்தருமாறு மனைவி, மனித உரிமைகள் ஆணைக் குழுவிடம் முறையிட்டுள்ளார்.

கடந்த 99 ஆம் ஆண்டு தர்மபுரத்தில் வசித்த நாகலிங்கம் தர்மலிங்கம் என்பவர் நாச்சிக்குடா ஊடாக இந்தியா செல்லும் போது இலங்கைக் கடற்படையின் தாக்குதலில் அகப்பட்டுள்ளார். அவருடன் சென்ற 16 பேரின் சடலங்கள் நெடுந்தீவுக் கடலில் கரையொதுங்கின. ஆனால், இவரின் சடலம் கண்டு பிடிக்கப்படவில்லை.

மூன்றரை வருடமாக இவர் இறந்துள்ளாரா அல்லது உயிருடன் இருக்கிறாரா என்பது தெரியவில்லை. உயிருடன் இருந்தால் அவரை மீட்டுத்தரும்படி காணாமற்போனவரின் மனைவி கேட்டுள்ளார்.

# எயிட்ஸ் நோயின் பாதிப்பைக் குறைக்க விழிப்புணர்வுச் செயற்பாடுகள் அவசியம்!

## மேலதிக அரசாங்க அதிபர் எடுத்துரைப்பு

(யாழ்ப்பாணம்)

மாறிவரும் எமது கலாசாரத்தில், எயிட்ஸ் தொடர்பாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடிய செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இவ்வாறு அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் நடாத்திய எயிட்ஸ் விழிப்புணர்வு சம்பந்தமான மாநாட்டில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மேலதிக அரச அதிபர் பத்தினியம்மா திலகநாயகம் போல், தனது உரையின்போது தெரிவித்ததுடன் இக்குழுவின் செயற்பாடுகளையும் பாராட்டினார்.

தொடர்ந்து யுனிசெப் அதிகாரி ஸ்ரீஸ்கந்தராஜா உரையாற்றும்போது - விழிப்புணர்வுக் கருத்தரங்குகளின் அவசியம் பற்றிக் கூறியதுடன் யாழ்.குடாநாட்டில் எயிட்ஸின் தாக்கங்களைக் குறிப்பிட்டு அவற்றைத் தடுக்கவேண்டிய கட்டாயத்தையும் விளக்கினார்.

இந்நிகழ்வில் - மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் செல்வி உமா சிவபாதசுந்தரம், மாணவர் அமைப்பின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் இலக்கியன், கல்வித் திணைக்கள அதிகாரிகள், சிறுவர் பாதுகாப்பு நிதிய இணைப்பாளர் மற்றும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# மீள்குடியமர்வு, தும்புத்தொழில் அனுமதிகோரி கொழும்புத்துறை மக்கள் போராட முடிவு!

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறையில் இன்னமும் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படாத பிரதேசங்களில் தம்மை மீளவும் குடியமர அனுமதிக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கேட்டுள்ளதுடன், தமது கைத்தொழிலான தும்புத்தொழிலை மேற்கொள்ள, கடலுக்கு அனுமதிக்குமாறும், இல்லையேல் போராட்டம் நடத்த வேண்டியநிலை ஏற்படும் என அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

கொழும்புத்துறை துறைமுகம் ஊடாக மீன்பிடிக்க மீனவர்களை அனுமதித்ததுபோல தும்புத் தொழிலை மேற்கொள்ளும் மக்களையும் கடற்பகுதிக்கு அனுமதிக்கவேண்டுமென அவர்கள் கேட்டுள்ளனர்.

மேலும் 1999 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஏற்பட்ட இராணுவ நடவடிக்கை காரணமாகத் தாம் அப்பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து வேறிடங்களில் வசித்து வருவதாகவும் தம்முடைய வீடுகளைச் சென்று பார்வையிடக் கூட அனுமதிக்கவில்லையென்றும் அம்மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

# சீர்மிகு பிரபந்தங்கள் பாடி பெருமை பெற்றவர்

**வை. க. சிற்றம்பலம் முதுபெரும் புலவரும், ஓய்வுபெற்ற ஆசிரியருமாவார். பண்டிதமணி கனபதிப்பிள்ளையின் மாணாக்கனான இவர், பல பிரபந்தங்களைப் பாடியுள்ளார். தனது 89 ஆவது வயதில் இன்றும் பல நூல்களைப் பாடியும், எழுதி வெளியிட்டுக் கொண்டும் வருகிறார். அண்மையில் கலாபூஷணம் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட இவருடனான நேர்காணல் இது.**

***கேள்வி***: நீங்கள் எத்துறைக்காகக் கலாபூஷணம் விருது பெற்றீர்கள்?

***பதில***:நான் பல பிரபந்த நூல்களைப் பாடி வெளியிட்டதல்லாமல், சமயத் துறையிலும் ஈடுபாடு கொண்டிருந்ததால் எனக்குக் கலாபூஷணம் வழங்கப்பட்டது.

***கேள்வி***:சுமார் எத்தனை பிரபந்தங்கள் பாடியிருக்கிறீர்கள்?

***பதில்***: சுமார் முப்பத்தாறு பிரபந்தங்கள் பாடியுள்ளேன்.

***கேள்வி***: எந்த நோக்கில் இவை பாடப்பட்டன?

***பதில்***: பெரும்பாலும் வழிபடும் தெய்வங்களை நோக்கி பாடியிருக்கிறேன். மற்றும் பெரும் புலவர்களையும், அறிஞர்களையும் பாடியுள்ளேன்.

***கேள்வி***: சில பிரபந்த வகைகளைக் குறிப்பிட்டுச் சொல்லுங்கள்

***பதில்***: திருப்பதிகம், ஒருபா ஒருபது, திருவிரட்டை மணிமாலை, மும்மணிமாலை,. நான்மணிமாலை இவையல்லாமல் திருவூஞ்சல், திருப்பள்ளியெழுச்சி, திருவருக்க மாலை, பிள்ளைத்தமிழ், இணைமணி மாலை, திருவந்தாதி இவை போன்ற பல.

***கேள்வி***: மணிமாலையைப் பற்றிச் சிறிது விளக்கிக் கூறுவீர்களா?

***பதில்***:மணிமாலைகள் பலவகை இருந்தாலும், அவற்றில் வெண்பா, கட்டளைக் கலித்துறையுடன், சிலவற்றில் விருத்தம், அகவலும் சேர்ந்து வரும்.

***கேள்வி***: ஆனால், இவற்றிலுள்ள விசேட தன்மை என்ன?

***பதில்***: பொதுவாக, எந்தக் கவிதையும் கட்டாயம் இசை பொருந்தவும், மோனை, எதுகை பொருந்தவும் பாடினால் சிறப்படையும். மரபுக் கவிதைகள் நான்கும் நல்ல இலக்கணமுடையன. அவற்றில் வெண்பா, கட்டளைக் கலித்துறை இரண்டும் அதிவிசேடமான இலக்கண வரம்புடையன.

***கேள்வி***: வெண்பாவைப்பற்றிச் சில முக்கிய விடயங்களைக் கூறுவீர்களா?

***பதில்***: ஆம், செப்பலிசை கட்டாயம். இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை மாத்திரம்




வரவேண்டும். நாலாம் வரி முச்சீருடையதாய், அதில் மூன்றாஞ் சீர் காசு, நாள், மலர், பிறப்பு என்னும் வாய்பாட்டால் முடியவேண்டும். குறைந்தது இரு அடி மற்றும் அதன் இனமான நேரிசை வெண்பா முதலானவற்றுக்குச் சிறப்பான இலக்கணமுண்டு.

***கேள்வி***: அப்படியானால் கட்டளைக்கலித்துறை பற்றிய முக்கிய இலக்கணமென்ன?

***பதில்***: அதன்பெயரே, கட்டளைகள் பொருந்தியதென்பதைக் குறிக்கின்றதல்லவா. அது நேரிசை முதலாகத் தொடங்கினால் பதினாறு எழுத்துக்களையும், நிரையசை முதலாகத் தொடங்கினால் பதினேழு எழுத்துக்களையும் கொண்டு, ஏகாரத்தால் முடிவது. ஐந்து சீரடிகள் நான்கினை உடையது. இன்னும் பல கட்டுப்பாடுகள் உண்டு.

***கேள்வி***: வேறும் மணிமாலை பாடியிருக்கிறீர்களா?

***பதில்***: ஆம். நல்லூர் இணை மணிமாலை நூறு செய்யுள்- 1994 இல் பாடி நல்லூரில் வெளியிட்டேன். அதாவது- வெண்பாவும், கட்டளைக் கலித்துறையுமாக, அந்தாதியாக நூறு செய்யுள் அமைதல் வேண்டும். நூறாம் செய்யுளின் அந்தமும், நூலின் முதற்பாட்டுத் தொடக்கமும் எழுத்தினாலோ அல்லது சொற்களினாலோ ஒன்றாக அமையவும் வேண்டும்.

***கேள்வி***: இவ்வாறு பிரபந்தங்களையும் அதனைப் பாடும் இலக்கணங்களையும் யாரிடம் கற்றீர்கள்?

***பதில***: திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் விரிவுரையாளராயிருந்த மட்டுவில் இலக்கிய கலாநிதி சி.கணபதிப்பிள்ளை அவர்களிடமும், வண்ணை நாவலர் காவிய பாடசாலையை நடாத்திய வித்துவான் ந.சுப்பையாபிள்ளை அவர்களிடமும் ஆகும்.

***கேள்வி***: சிறப்பாக, இவர்களிடம் எவற்றைக் கற்றீர்கள்?

***பதில்***: தொல்காப்பியம், எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகார இலக்கண நூல்களன்றி சங்க இலக்கியங்களில் சில சில பகுதிகளையும், பிற்காலத்திலமைந்த கம்பராமாயணம், திருக்கோவையார் என்பவற்றையும் கற்றேன்.

***கேள்வி***: நீங்கள் பாடிக் கடைசியாக வெளியிட்ட நூல் எது?

***பதில்***: என்னைப் படிப்பித்த இலக்கிய கலாநிதி பண்டிதமணி கணபதிப்பிள்ளையைச் சிறப்பித்துப் பாடிய "பண்டிதமணி நான்மணி மாலை" என்பது.

***கேள்வி***: அப்படியாயின் அவரைப் பற்றி ஏதாவது கூற விரும்புகிறீர்களா?

***பதில்***: ஆம். நான் அவரிடம் ஆசிரியப் பயிற்சி பெற்றேன். பயிற்சி முடித்து வெளியேறினாலும், பண்டிதமணி அவர்களை இடையிடையே கண்டு வருவது வழக்கம். ஒருமுறை அவரது பிறந்தநாளன்று, அவரை வாழ்த்தி ஒரு கட்டளைக் கலித்துறை பாடி அவரிடம் கொடுததேன். உடனே அவர் 'சிற்றம்பலம், உமது செய்யுள்களையெல்லாம் வாரந்தோறும் இடையிடையே "ஈழநாடு" பத்திரிகையில் பார்க்கிறேன். பாட்டுகள் நன்றாயிருக்கின்றன. இனிமேல் நீர் "திருமுருகன் பாத மலர்ந்தேன்" என்று தொடங்கி நல்லூர் முருகனைப் பாடும் என்றார். பாடினேன்.

***கேள்வி***: அப்படியாகப் பாடிய நூல் யாது?

***பதில்***: அதுதான் வெண்பாவும், கட்டளைக் கலித்துறையும்- அந்தாதியாக விரவிவரப் பாடப்பெற்ற நல்லூர் முருகன் இணைமணிமாலை என்பதாகும்.

***கேள்வி***: ஆரம்பமாக எப்போது பாடத் தொடங்கினீர்கள்?

***பதில்***: தொடக்கத்தில் "ஈழநாடு" பத்திரிகையில் (கிட்டத்தட்ட 1980 ஐ அடுத்த காலத்தில்) வாரந்தோறும் வெண்பா விருத்தம், கீர்த்தனங்களைக் கோயில் மகோற்சவ காலத்தில் பாடியனுப்பினால், விரும்பிப் போடுவார்கள். அதனால் உற்சாகமடைந்து பாடியனுப்புவேன்.

***கேள்வி***: ஓய்வை விரும்பும் இவ்வயதில்மேலும் பாடி நூல்களைச் செய்யும் எண்ணமுண்டா?

***பதில்***: ஆம். முப்பத்தைந்தாவது நூல் அச்சாகி மிக விரைவில் வெளிவர இருக்கிறது அதுதான் திருவிசைப்பா, திருப்பல்லாண்டுகளைக் கூறும் 9 ஆம் திருமுறை. பதவுரையும், குறிப்புரையும் அடங்கியது.

***கேள்வி***: நீங்கள் பதவுரை எழுதிய வேறு நூல்களுமுள்ளதா?


**வை. க. சிற்றம்பலம்**

***பதில்***: ஆம். அதுதான் கந்தரநுபூதி பதவுரை. இந்த உரை 1995 இல் செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகனின் அன்புக் கட்டளையால் எழுதப்பட்டது. கரணவாய் கப்புது சிவசுப்பிரமணியர் ஆலயத்தில் வெளியிடப்பட்டது.

***கேள்வி***: பிரபந்தங்களுக்காக பாராட்டப்பட்டதுண்டா?

***பதில்***: 1992 இல் விபுலானந்தரின் நூற்றாண்டு பிறந்தநாளில் அவரைப் பற்றிப் பாடிய நான்மணி மாலைக்கும் 1994 இல் இலங்கையில் வெளியிட்ட கவிதை நூல்களில் சிறந்ததாக நான் பாடிய நல்லூர் முருகன் இணைமணிமாலைக்கும் கொழும்பு தமிழ்ச் சங்கம் இருமுறை முதற் பரிசாகப் பணமும், பத்திரமும் தந்தது.

**நேர்காணல்:**
**சாந்தகுமார்**

# ஈராக்கின் வரலாற்றுப் பாரம்பரியமும் அமெரிக்கா தொடுத்துள்ள போரும்!

ஈராக் - இது பழம்பெரும் நாகரிகங்களுள் ஒன்றான மொசப்பத்தேமிய நாகரிகத்திற்குச் சொந்தமான நில மாகும். யூப்பிரட்டீஸ், ரைகிறிஸ் ஆகிய இரு நதிகளுக்கிடையிலுள்ள நிலப்பரப்பில் கட்டியெழுப்பப்பட்டதே மொசப்பத்தேமிய நாகரிகமாகும். இன்றோ....... தொடர் தாக்குதலுக்குள்ளாகி அதிர்ந்து கொண்டிருக்கின்றன மொசப்பத்தேமிய நாகரிகத்தின் அத்திவாரக் கற்கள். அமெரிக்கா ஏன் இதைச் செய்கிறது?

ஜேர்மனி, பிரான்ஸ், ரஷ்யா, சீனா, இந்தியா போன்ற முன்னணி நாடுகளும் - அமெரிக்கா, பிரித்தானிய மக்களில் ஒரு பகுதியினரும் கடுமையாக எதிர்த்தாலும், அமெரிக்கா- ஈராக்கைத் தாக்கிக் கொண்டிருக்க, பிரித்தானியா மட்டும் பக்கபலமாக நின்று உதவியும் வருகிறது.

பாலைவனப்போர்-II என்று வெறுமனே சொல்லிவிட்டுத் தாண்டிச் சென்று விடமுடியாது. இந்த யுத்தத்தின் சிதைவுகளுக்குள் விளங்கிக் கொள்ளவேண்டிய நிறைய விடயங்கள் இருக்கின்றன. இதற்கான வரலாற்றை ஒரு கணம் திரும்பிப் பார்க்க வேண்டிய தேவையிருக்கிறது.

கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலேயே கண்டங்களைத் தாண்டி மனிதனது தேவைகள் வியாபித்திருந்தன. பொருள் தேடுவதும், கலாசாரங்களைப் பரிமாறுவதும் இதன் நோக்கமாக இருந்தது. மேலைத்தேய நாடுகளும், கீழைத்தேய நாடுகளும் தமது வர்த்தக முயற்சிகளையும், ஏனைய தேவைகளையும் மத்திய ஆசியப் பகுதிகளில் வாழ்ந்த அராபியருக்கூடாகவே மேற்கொள்ள வேண்டியிருந்தது. அராபியர்கள் தரகர்களாக இருப்பதற்கான வாய்ப்பினை மத்திய ஆசியாவின் புவியியல் அமைவிடமே கொடுத்தது. இந்த அமைவிட முக்கியத்துவம் 21 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் செல்வாக்குடன திகழ வதைக் கருத்திற்கொள்ளத் தவறக்கூடாது.

இன்றைய உலகப்போக்கில் உலகிலுள்ள புவியியல் நிலவு




ருவங்கள் எல்லாமே ஏதோவொரு வகையில் முக்கியத்துவமானதாக மாறிவிட்டன. மலைகள், பாலைவனங்கள், தீவுகள், ஏரிகள், கடல், சமுத்திரம் என எல்லாமே மனிதத் தேவைகளின் மையமாக மாறிவிட்டது. அவ்வாறு மாற்றியமைத்த பெருமை மனிதனுக்குரியது. இந்தப் பாய்ச்சலுக்குப் பக்கபலமாக இருந்தது விஞ்ஞான, தொழில் நுட்பத்தின் கண்டு பிடிப்புக்களும், வளர்ச்சியுமே.

கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்ட தரை வர்த்தகப் பாதை- 15 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் துருக்கி கொன்ஸ்ராந்திநோபிள்ஸ் துறைமுகத்தைக் கைப்பற்றியதுடன் முடிவுக்கு வந்தது. துருக்கி, மத்தியதரைக் கடலின் முக்கியமான ஓர் அமைவிடத்தைத் தன்னகத்தே வைத்திருக்கிறது. அதேவேளை, மத்திய கிழக்கு நாடுகளின் வடக்கேயும், ஐரோப்பாவின் தென்முகமாகவும் அமைந்திருப்பதால் துருக்கியைத் தாண்டி மத்திய கிழக்கிற்குள் வியாபாரம் செய்யும் நடவடிக்கைக்கான வாய்ப்புக்கள் அறவேயில்லாது போயிற்று.

ஐரோப்பாவிற்கும், ஆசியாவிற்குமான வர்த்தகத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கான ஒரு புதிய மார்க்கமாகவே நாடுகளின் பயணங்கள் ஆரம்பிக்கப்பட்டன. ஐரோப்பாவின் மேற்குக் கரை நாடுகளான பிரித்தானியா, போர்த்துக்கல், ஒல்லாந்து, ஸ்பெயின் போன்ற நாடுகள் இம்முயற்சியில் மும்முரமாக இறங்கிய போதிலும், கி.பி. 1850 இன் பின்பான கைத்தொழிற்புரட்சியின் விளைவாகப் பிரித்தானியா உலகின் பல பிராந்தியங்களையும் தனதாக்கி,

**விஜயன்**

"சூரியன் அஸ்த்தமிக்காத சாம்ராஜ்யம்" என்ற சிறப்புப் பெயரையும் பெற்று, உலகின் முன்னணி நாடாகவும் மாறியது. இந்த முதன்மை 1945 இல் இரண்டாம் உலகயுத்தம் முடியும்வரை நிலைத்திருந்தது.

இரண்டாம் உலகயுத்த முடிவில் பெரிய பிரித்தானியா அதுவரை பெற்றிருந்த உலக முதன்மையை அமெரிக்கா, சோவியத் யூனியன் ஆகிய இரு நாடுகள் பெற்றுக் கொண்டன. இவ்விரு நாடுகளும் கோட்பாட்டு ரீதியில் முதலாளித்துவம், சோசலிஷம் என இரு முகாம்களாக வெளித்தெரிந்தபோதிலும், உலகைக் கூறுபோடுவது என்ற விடயத்தில்


**ஈராக்கில் நுழைந்த அமெரிக்கப் படைகளின் டாங்கி ஒன்று சுவரொன்றில் வரையப்பட்டிருந்த சதாமின் ஓவியத்தை சிதைக்கிறது**


குணாமசீதியில் ஒன்றாகவே காணப்பட்டன. முதலாளித்துவ அணிகளுக்குத் தலைமைதாங்கும் அமைப்பாக நேட்டோவும், சோசலிஷ அணிக்குத் தலைமை தாங்கும் அமைப்பாக "வோர்சோ" களும் தமக்குள் நேரடியாக மோதிக் கொள்ளாமல் சமபலத்தைப் பேணி (Balance of Power), தண்மை யுத்தம் ஒன்றினை (Cold War) நடத்தி வந்தன. இப்போக்கு சோவியத் யூனியனின் தலைவராக மிக்கெயில் கொர்ப்பச்சேவ் பதவியேற்றதன் பின் படிப்படியாக மாற்றமடைந்து, சோவியத்யூனியனின் சிதம்பிப்போன நிலையுடன், உலகின் முன்னணி இடத்திற்கு அமெரிக்கா வருவதற்கு வழிவிடவேண்டியு நிலையும் ஏற்பட்டது.

1990 இன் ஆரம்பத்திலேயே 1945 இற்கு முன்பான காலகட்டத்தில் பெரிய பிரித்தானியா உலகின் முன்னணி நாடாக இருந்தது போன்றதொரு நிலையினை ஐக்கிய அமெரிக்கா பெற்றுக் கொண்டது.

(தொடரும்)

# மீண்டும் பக்தாத்தை நோக்கி முன்னேற தீவிரமான போரில் அமெரிக்கப் படைகள்!

## 24 மணி நேரத்தில் 900 வான் தாக்குதல்கள்


பக்தாத் நோக்கிய நகர்வு

தமது முன்னேற்ற முயற்சிகளில் பின்னடைவைக் கண்டுவந்த அமெரிக்க - பிரிட்டிஷ் படைகள், நேற்றுத் தீவிரமான சமரொன்றின் மூலம் பக்தாத்தை நோக்கிய நகர்வை மீண்டும் வேகமுடன் முன்னெடுத்தன.

பக்தாத்தின் மீது ஐந்து நாட்களாக நடத்தப்பட்டிருந்த - கடுமையான விமானக்குண்டு வீச்சின் பின்னர்- ஈராக்கின் முக்கிய படையணியான, குடியரசுப் படையின் கேந்திர ஸ்தானங்களைத் தாக்கியவாறு - இந்த முன்னேற்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

ஆனாலும் - குடியரசு இராணுவம், மிகவும் வலிமையான எதிர்ப்பைக் காட்டிவருவதாகவே செய்திகள் தெரிவிக்கின்றன.

தாக்குதல் நடாத்தும் அமெரிக்கப் படைகளின் தளபதியான ஜெனரல் ரொமி ஃபிராங்ஸ் - தாம் பக்தாத்திலிருந்து நூறு கிலோமீற்றர்கள் தொலைவிலேயே நிற்பதாகக் குறிப்பிட்டபோதும் - அதனை நடுநிலையாளர்களால் உறுதிப்படுத்த முடியவில்லை.

இதேவேளை - நஸ்ரியாவில் தாம் கைப்பற்றிய பகுதிகளிலிருந்தும் அமெரிக்கப் படைகள் - பக்தாத் நோக்கிப் பிரதான நெடுஞ்சாலை வழியே முன்னேறி வருகின்றன.

அமெரிக்க இராணுவம், பி-52 ரக யுத்த விமானங்களாலும், அப்பாச்சே தாக்குதல் ஹெலிகொப்ரர்களாலும் - கடந்த 24 மணிநேரத்தில் மட்டும் 900 வான் தாக்குதல்களைப் பக்தாத் மீது நடாத்தியிருக்கிறது.

இதேபோன்று தாக்குதல் நடாத்திய - அப்பாச்சே ஹெலிகொப்ரரொன்று நேற்றுமுன்தினம் ஈராக்கிய விவசாயிகளால் கர்பால் நகரருகே சுட்டுவீழ்த்தப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இந்த ஹெலியில் பயணஞ்செய்த - இரண்டு அமெரிக்க விமானிகளான, **Chief warrant Officer** தர அதிகாரிகளான - ரொனால்ட் யங் (வயது 26), டேவிட் வில்லியம்ஸ் (வயது 30) ஆகியோர் தம்மிடம் பணயக் கைதிகளாகியிருப்பதை ஈராக்கியத் தொலைக்காட்சி காண்பித்தது.


வீழ்த்தப்பட்ட அப்பாச்சே ஹெலியின் விமானிகள்

# நகரம் சார் யுத்தமுறையால் திணறும் பிரிட்டிஷ் படைகள்!

(பஸ்ரா)

ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரான - பஸ்ராவில் வைத்து, அமெரிக்க - பிரிட்டிஷ் படைகள் மீது 'நகரம் சார்ந்த யுத்தமுறை' மூலம் தாக்குதல் நடாத்தும் பாணியை (**Urban Warfare**) - ஈராக்கியப் படையினர் கடைப்பிடிப்பதாகத் தெரியவருகின்றது.

இதனால், பஸ்ராவின் முக்கிய பகுதிகளுக்குள் இன்னமும் நேச நாட்டுப் படைகளால் உள்நுழைய முடியாதிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - பஸ்ராவில் மறைந்திருந்து தொடர் தாக்குதல்களில் ஈடுபட்டுவரும் நூற்றுக்கும் அதிகமான ஈராக்கியப் படையினருக்கு உதவியாக - அந்நாட்டின் 51 ஆவது டிவிஷனைச் சேர்ந்த இராணுவ அணிகள் பஸ்ராவுக்கு அனுப்பப்பட்டிருப்பதாக - ஈராக்கியப் பாதுகாப்பு அமைச்சகம் கூறியது.


பஸ்ராவில் ரோந்துவரும் நேச நாட்டுப் படைகளின் தாக்குதலைவிட - நகருக்கு வெளியிலிருந்து பிரிட்டிஷ் படைகள் மேற்கொள்ளும் ஆட்லறித் தாக்குதல்களில் - மீதமாயிருக்கும் கட்டடங்களும் உடைந்து சிதைந்து வருகின்றன.

நேச நாட்டுப் படைகள் நடாத்திவரும் வானொலியொன்றில், தாம் பஸ்ராவுக்குள் முழுமையாக நுழையும்வரை - வீதிகளில் ஆயுதம் தாங்கி எவர் திரிந்தாலும், அவர்கள் விசாரணைகளின்றிச் சுடப்படுவார்கள் - எனப் பிரிட்டிஷ் படையினர் அடிக்கடி அறிவித்தல் விடுத்துவருகின்றனர்.

உலகவலம்

# பஸ்ரா நகருக்குள் நுழையும் பிரிட்டிஷ் 'பாலைவன எலிகள்'

## நேற்று மற்றொரு கொமாண்டோ பலி


உடற்சோதனையும் தீவிரம்

(பக்தாத்)

பஸ்ராவில் நிலைகொண்டுள்ள பிரிட்டிஷ் படைகள்மீது நடாத்தப்பட்ட ஈராக்கியரின் தாக்குதலில்- அந்நாட்டுப் படையதிகாரி ஒருவர் நேற்றுக் கொல்லப்பட்டார்.

பஸ்ராவில் மறைந்திருந்த ஈராக்கியப் படையினரின் தாக்குதலிலேயே இவர் பலியானதாகவும் - இவர் பஸ்ராவில் பிரிட்டிஷ் படையணி இழந்த இரண்டாவது படைவீரர் என்றும் - அந்நாட்டுக் கொமாண்டோக்கள் தெரிவித்தனர்.

இத்துடன் - ஈராக் போரில் இதுவரை 18 பிரிட்டிஷ் படையினர் பலியாகியுள்ளனர் என்றும் - இதைவிட றோயல் மரான் படைப்பிரிவின் எட்டு வீரர்கள் - குவைத்தில் கடந்த வாரம் நடந்த ஹெலி விபத்தில் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் - பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்தது.

பஸ்ராவில் - போரிடும் தந்திரோபாயத்தைச் சற்று மாற்றி - பிரிட்டனின் ஏழாவது இராணுவப் படையினரின் 'பாலைவன எலிகள்' (**Desert Rats**) என அழைக்கப்படும் இராணுவ அணி தற்போது பஸ்ராவிற்குள் நுழைந்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை -

துறைமுக நகரமான உம் காசிரிலும் இன்னும் - நூற்றுக்கும் அதிகமான ஈராக்கியப் படையினர் தங்கியிருந்து - அங்கு ரோந்துவரும் அமெரிக்க - பிரிட்டிஷ் படையினரைத் தொடர்ந்து தாக்கியிருக்கின்றனர். இத்தாக்குதல்களில் பிரிட்டிஷ் படையினர் சிலர் படுகாயமடைந்துள்ளனர்.


# நீரின்றிவாடும் பஸ்ரா மக்களுக்கு உதவ ஐ.நா. சபை கோரிக்கை!

(பஸ்ரா)

பஸ்ரா நகரிலுள்ள மக்களுக்குக் குடிநீர் வழங்கிவந்த விநியோக நிலையம் - அமெரிக்கப் படைகளின் தாக்குதலில் சிதைக்கப்பட்டதைத் தொடர்ந்து - அங்கு ஏற்பட்டிருக்கும் பாரிய குடிநீர்ப் பிரச்சினை பற்றி- மனிதநேய நிறுவனங்கள் உடன் கவனிக்கவேண்டுமென - ஐ.நா. செயலாளர் நாயகம் கோபி அனான் கோரிக்கை விடுத்துள்ளார்.

குடிநீர்ப் பற்றாக்குறையைத் தீர்த்துவைக்க - தாக்கப்பட்ட நீர்விநியோக மையத்தைச் சீராக்குவதற்கு - உடனடியாகப் பொறியியலாளர்கள் அங்கு அனுப்பப்படுவதாகச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அறிவித்துள்ளது.

# புஷ்ஷுடன் நேரில் ஆராய்வதற்கு வொஷிங்ரன் செல்லும் பிளேயர்!



(லண்டன்)


ஈராக்கில் நடத்தப்பட்டுவரும் தாக்குதல்கள் பற்றி, அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷுடன் ஆராய்வதற்காக - பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் அமெரிக்கா செல்கிறார்.

இந்த வாரத்தினுள் இவர் வொஷிங்ரன் செல்லவுள்ளதாக - ரொனி பிளேயரின் மாதாந்தப் பத்திரிகையாளர் சந்திப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - 'கார்டியன்' பத்திரிகை நடத்திய கருத்துக் கணிப்பொன்றில் 54 சதவீத பிரித்தானியர் தொடரும் போருக்கு ஆதரவு தெரிவிப்பதாகவும், 30 வீதமானோர் அதனை எதிர்ப்பதாகவும் தெரியவந்தது.

# ஈராக் போர்க்களம்


முன்னேறிவரும் அமெரிக்க - பிரிட்டிஷ் படைகளை எதிர்த்துப் போருக்குத் தயாராகும் ஈராக்கியப் பெண்மணிகள்.


பிரிட்டிஷ் மரைன் படையினர், பயிற்சியளிக்கப்பட்ட டொல்பின் மீன்களை கடற்கண்காணிப்புக்காகப் பயன்படுத்துகின்றனர். இங்கே டொல்பினின் செட்டை ஒன்றில் சிறிய கமராவைக்கூடக் காணலாம்.


அமெரிக்காவின் பலவகையான தாக்குதல் ஹெலிகள் ஈராக்கின் வான்பரப்பை 24 மணிநேரமும் ஆக்கிரமித்தே வருகின்றன.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# என்ன நடந்தாலும் இலங்கைக்கு எரிபொருள் விநியோகம் தொடரும்!

## சவூதி அரேபியா, ஒபெக் அறிவிப்பு

ஈராக் மீதான அமெரிக்காவின் தாக்குதல்கள் தொடர்கின்றபோதும், இலங்கைக்குத் தொடர்ச்சியாக எரிபொருளை வழங்குவதற்கு சவூதி அரேபியாவும், ஒபெக் அமைப்பும் உறுதியளித்துள்ளன.

வளைகுடாவில் என்ன நடந்தாலும் இலங்கைக்கான எரிபொருள் விநியோகம் எந்தவகையிலும் பாதிக்கப்படாது என்றும் சவுதி அரேபியாவும், ஒபெக் அமைப்பும் தெரிவித்துள்ளன.

பெற்றோல் பற்றாக்குறையை நிவர்த்திக்கும் வகையில், 500 மில்லியன் பரல் பெற்றோலினை உடனடியாக இலங்கை அரசுக்கு வழங்குவதற்கும் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தற்போது ஒரு மாதத்துக்குத் தேவையான எரிபொருள் நாடுமுழுவதும் உள்ள களஞ்சியங்களில் சேமிக்கப்பட்டிருப்பதாகவும், விற்பனைக்குச் செல்லும் எரிபொருளுக்குப் பதிலாக புதிய எண்ணெய் களஞ்சியப்படுத்தப்படுவதாகவும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

சுத்திகரிக்கப்பட்ட எரிபொருளை ஈரான், சிங்கப்பூர், இந்தியா போன்ற நாடுகளிலிருந்தே இலங்கை பெறுவதால், இவற்றுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் என்று கவலைப்பட வேண்டிய அவசியமில்லை என்றும் கூட்டுத்தாபன வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.



திருமலை பாலையூற்றுப்பகுதியில் நேற்று முன்தினம் பாதையிலிருந்து தடம்புரண்டு நிற்கும் திருமலை - கொழும்பு ரயில் சேவை.

## கேரதீவு-சங்குப்பிட்டி பாதை திறக்கக் கோரிக்கை

தற்போது பொதுமக்கள் பாவனைக்குத் தடைசெய்யப்பட்ட கேரதீவு - சங்குப்பிட்டி பாதையை, உடனடியாகத் திறக்கக்கோரி இலங்கைச் செஞ்சிலுவைச்சங்க கிளிநொச்சிக் கிளை, வடபகுதி அரச அதிபர்களுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்தசங்கரிக்கும் கடிதங்களை அனுப்பிவைத்துள்ளது.

(09)

## பெற்றோரிடம் ஒப்படைப்பு

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைவதற்காகச் சென்ற இரு சிறுவர்கள், கிளிநொச்சி அரசியற்துறைச் செயலகத்தில் வைத்து அவர்களது பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

# பளையில் வாகனம் மோதி வயோதிபர் ஸ்தலத்தில் பலி

(பளை)

கண்டி வீதியில் நேற்று வாகனம் ஒன்று மோதியதில் வயோதிபர் ஒருவர் பலியானார். மோதிய வாகனமும் தப்பியோடிவிட்டது.

நேற்றுக்காலை 10 மணியளவில், பளைக்கும் தர்மக்கேணிக்கும் இடையில் இவ்விபத்து நடைபெற்றுள்ளது. இதில் ஆழியவளையைச் சேர்ந்த வேல்விநாயகம் வேலையா (வயது 50) என்பவரே பலியானவராவார். இது தொடர்பாக, பளை காவற்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (115,09)

# குடாநாட்டு நிலைமையை ஆராய நெதர்லாந்து பிரதிநிதிகள் வருகை

குடாநாட்டின் தற்போதைய நிலைமைகள் குறித்து ஆராய, இலங்கையிலுள்ள நெதர்லாந்து தூதரக அதிகாரிகள் நேற்று யாழ்ப்பாணம் வந்தனர்.

இவர்கள் யாழ். செயலகத்தில், தாம் மேற்கொள்ள வேண்டிய நிதியுதவிகள் எவை என்பது குறித்து அதிகாரிகளுடன் ஆராய்ந்தனர். இதே சமயம், ஏற்கனவே தமது நாடு வழங்கிய நிதி எவ்வாறு மக்கள் சேமநலன்களுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று ஆராய்வதிலும் அவர்கள் ஆர்வம் காட்டினர்.

## நிதானமின்றி...

மான காலகட்டத்தில், தமிழினத்தின் குறிக்கோளை மனதில் வைக்காது எழுந்தமானமாகப் பேசுவதோ, செயலாற்றுவதோ தவிர்க்கப்பட வேண்டும்.

தமிழர்களாகிய எங்களுக்குள் வேறுபாடுகள் இருக்கின்றன என்ற வகையில் பேசுவதோ, செயற்படுவதோ, நிச்சயம் நன்மை தரப்போவதில்லை. மாறாக, எமது மக்களின் எதிர்காலத்திற்கும் எதிர்பார்ப்பிற்கும் தீங்குகளையும் பாதிப்புக்களையும் தருவதாகவே அமையும்.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் யாழ்ப்பாணத்தில் பேசியிருப்பது பற்றி மிகவிரைவில் எமது கட்சிச் செயற்குழுவில் கூடி ஆராயவிருக்கின்றோம். அவ்வேளை இவ்விடயம் பற்றி நாம் மக்களுக்குத் தெளிவுபடுத்துவோம் என்றார்.

# ஆனந்தசங்கரியின் கூற்று கூட்டமைப்புக்கு முரணானது

## சுரேஷ் பிரேமச்சந்திரன் கண்டனம்

இனிவரும் உள்ளூராட்சித் தேர்தல்களில் தமிழர் விடுதலைக் கூட்டணி தனித்தே போட்டியிடும் என அக்கட்சியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி கூறியிருப்பது- தமிழர்களின் பலத்தைச் சிதைக்க முயலும் செயலே என கூட்டமைப்புப் பிரமுகரும் ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

நேற்று அரசாங்க வானொலிச் சேவையில்- வீ.ஆனந்தசங்கரி மேற்கண்டவாறு தெரிவித்திருப்பதாக வெளியான செய்தி பற்றிக் கருத்துக் கூறுகையிலேயே அவர் இவ்வாறு விமர்சித்தார்.

ஆனந்தசங்கரியின் கூற்று- கூட்டமைப்பின் கருத்துக்கு முரணானது. இதனைக் கூட்டமைப்பு ஒருபோதும் வரவேற்காது என்று தெரிவித்த சுரேஷ் பிரேமச்சந்திரன்,

-தமிழர்கள் ஒன்றுதிரண்டு நிற்க வேண்டிய வேளையில், இவ்வாறு பேசுவது அர்த்தமற்றது என்றும் கூறினார்.

# மனித உரிமைகள் ஆணைக்குழு அங்கத்தவர் பதவிக்காலம் முடிவு

மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவரினதும் அங்கத்தவர்களது 5 வருட பதவிக்காலம் நேற்று முன்தினத்துடன் முடிவடைந்தது.

புதிய தலைவரும் அங்கத்தவர்களும் நியமிக்கப்படும்வரை, ஆணைக்குழுவின் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதிகாரம் அதன் செயலாளர் ஹேமா சிறிவர்த்தனவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர் பதவிக்கென- டொக்டர் தீபிகா உடுகம, டொக்டர் எஸ்.ஏ. செயிலுதீன், செல்வகுமாரன் ஆகியோரின் பெயர்களும் தேர்வுக்கென அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

அரசியல் யாப்புச் சபை, அதன் பரிந்துரைகளை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்ததும், மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர் பதவிக்கான நியமனம் நடைபெறும்.

## சமாதான...

தெரிவித்துள்ளார்.

அவர் மேலும், இலங்கை அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் அரசியல் தீர்வு குறித்து அடைந்த முன்னேற்றம், உதவி வழங்கும் நாடுகளிடம் கூடுதலான உதவியைப் பெற்றுக்கொள்வதற்கான பலத்த அடித்தளத்தை இட்டுள்ளது.

ஜூன் மாதத்தில் ரோக்கியோவில் நடைபெறவிருக்கும் உதவி வழங்கும் நாடுகளின் உச்சி மாநாட்டில் இந்த நன்மையைக் காணக்கூடியதாகவிருக்கும்.

ஐக்கிய நாட்டுக்குள் அதிகாரப் பகிர்வு குறித்து இருதரப்பினரும் ஏற்படுத்திக்கொண்டுள்ள நடவடிக்கைகள், உலக சமூகத்தின் பாராட்டுதலைப் பெற்றுள்ளது என்றும் தெரிவித்தார்.'

பேச்சுக்கள் நடைபெறுகையில், மனிதஉரிமைகளைப் பாதுகாப்பதற்கு இருதரப்பினரும் காண்பிக்கும் கடப்பாடு பாராட்டத்தக்கது.

மனிதஉரிமை ஆணைக்குழுவை வலுப்படுத்துவதற்கு அமெரிக்கா உதவும் என்றும் குறிப்பிட்ட அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஆர்மிரேஜ், வடக்கு - கிழக்கு உள்ளூராட்சித் தேர்தலை நடாத்துவதற்கு விடுதலைப் புலிகள் ஆதரவு தெரிவித்தமை ஜனநாயகத்துக்குக் கிடைத்த வெற்றி என்றும் கூறினார்.

# பூங்காவில் படைமுகாமா? தடுத்து நிறுத்தத் தீர்மானம்!

## 7 பேர் கொண்ட நடவடிக்கைக்குழு அமைப்பு

பொது நூலகம், பாடசாலைகள், விளையாட்டு அரங்கு என்பன இருக்கும் பகுதியில் - சுப்ரமணியம் பூங்காவில் - இராணுவ முகாம் அமைக்கும் திட்டத்தை முழுமையாக எதிர்ப்பது என, முன்னாள் மாநகரசபை ஆணையாளர் சீ.வி.கே. சிவஞானம் தலைமையில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

இப்பகுதியில் இராணுவ முகாம் அமைவதைத் தடுக்க அனைத்துத் தமிழ் எம்.பிக்களும் ஒருமித்துக் குரல் கொடுக்க வேண்டும் எனவும், தமது எதிர்ப்பை எம்.பிக்களும், தொண்டர் நிறுவனங்களும் பிரதமருக்கும், பாதுகாப்பு அமைச்சருக்கும், யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கும் அறிவிக்க வேண்டும் எனவும் நேற்றைய சந்திப்பின் போது தீர்மானிக்கப்பட்டது.

இது தொடர்பாக தொடர்ந்து முன்னெடுப்புக்களை மேற்கொள்ள ஏழுபேர் கொண்ட குழுவும் அமைக்கப்பட்டுள்ளது.

(சு)

## அமெரிக்க...

இத்தகைய கரும்புகை மண்டலத்தால் இலக்கைத் தவறவிடும் நிலை ஏற்படுகிறது.

இதனிடையே, அமெரிக்காவின் செய்மதி வழிகாட்டல் மூலமான ஏவுகணைத் தாக்குதல்களைத் தடுப்பதற்காகவும், அவற்றின் இலக்குகளைக் குறிதவறச் செய்வதற்காகவும் ரஷ்யா, ஈராக்கிற்கு உதவுவதாக அமெரிக்க அதிகாரிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

அமெரிக்காவின் இத்தகைய செய்மதிகளின் சமிக்ஞைகளைக் குழப்ப, ஈராக்கியப் படைகளுக்கு ரஷ்யா புதிய தொழில்நுட்பக்கருவிகளை வழங்கியுள்ளதாகவும், இதனாலேயே சதாமின் இருப்பிடங்களைக் கண்டறிந்து இலக்குப்பிசகாது தாக்க முடியாதிருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ரஷ்ய தனியார் பாதுகாப்பு நிறுவனங்களில் ஒன்றான ஏவிக்கொன் வேர்சியா என்ற நிறுவனமே, ஈராக்கிற்கு செய்மதி சமிக்ஞையை குழப்பும் தொழில்நுட்பக் கருவிகளை வழங்கியுள்ளது.

## தேர்தலில்...

களை வாக்களிக்கவிடாது தடுத்தமை சட்டவிரோதமானது என்றும், தேர்தல் சட்டங்களை அது மீறியுள்ளதாகவும் தீர்ப்பளிக்கப்பட்டது.

அதேவேளை - தேர்தல் நடந்த அன்றைய தினம் ஜனாதிபதி சந்திரிகா, முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க, முன்னாள் சபாநாயகர் அநுரா பண்டாரநாயக்க ஆகியோரை வீட்டில் இருந்து வாக்களிக்க அனுமதித்தமையும் சட்டவிரோதமானது எனவும் தீர்ப்பளிக்கப்பட்டது.

55 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் வாக்களிக்கமுடியாத நிலையில் இருந்தபோது, பாதுகாப்பு வசதிகளுடன் இருந்த இந்த மூவருக்கும் வீட்டில் இருந்தவாறே வாக்களிக்க அனுமதித்தமை - தேர்தல் சட்டவிதிகளுக்கு முரணானது என்றும் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

கணினி பக்க வடிவமைப்பாளர் தேவை

CORELDRAW, PAGE MAKER இல்
அனுபவமுள்ள கணினி பக்க வடிவமைப்பாளர்கள்
எதிர்வரும் 30-03-2003 இற்கு முன்னதாக அலுவலக நேரத்தில் பொது முகாமையாளரை நேரில் வந்து சந்திக்கவும்.

கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

நிர்வாக இயக்குநர்,
நமது ஈழநாடு.

## தொண்டராசிரியர்..

தில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களுடைய போராட்டத்துக்கு தமிழர் ஆசிரியர் சங்கம் முழுமையான ஆதரவை வழங்கிவருகிறது.

மேற்படி ஆசிரியர் நியமனங்கள் எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னராக வழங்கப்படாவிட்டால், வட-கிழக்கிலுள்ள வலயக்கல்வித் திணைக்களங்கள், பாடசாலைகள் முன்பாக, தொடர்ச்சியான மறியற் போராட்டம் நடாத்தப்போவதாக மகாசிவம் மேலும் தெரிவித்தார். (05)




## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.65 | 97.09 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 154.32 | 155.79 |
| 1 யூரோ | 106.36 | 107.65 |
| 1 சுவிஸ் பிராங் | 72.35 | 73.66 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 59.01 | 60.15 |
| 1 ஜப்பானிய யென் | 00.82 | 00.83 |
| 1 சவூதி றியால் | 25.85 | 25.85 |

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 26.03.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.